


# இலக்கு

வாராந்த மின்னிதழ்


அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 30 ★ 16.06.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


## தலைவர் பிரபாகரனுக்கு இணையாக வேறு எவரையும் கூறவே முடியாது.

மைத்திரிக்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் பதிலடி





## ஈழத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வருவது சாத்தியம்.

தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் **வேல்முருகன்** இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி

## சற்று முன்னர் முல்லைத்தீவில் பிக்குகள் தலைமையில் பெருமளவில் களமிறங்கிய சிங்களவர்கள்





## நீராவியடியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை பௌத்த மயமாக்க இரகசியத் திட்டம்

**நவநீதன்** இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி

## அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழினம் காத்திரமான முடிவை மேற்கொள்ளவேண்டும்

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

# சற்று முன்னர் முல்லைத்தீவில் பிக்குகள் தலைமையில் பெருமளவில் களமிறங்கிய சிங்களவர்கள்

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள குருகந்த ரஜமஹா விகாரைக்கு கொழும்பு அனுராதபுரம் வெலிஓயா பகுதியிலிருந்து மூன்று பஸ்களிலிருந்து அழைத்துவரப்பட்ட சிங்கள மக்கள் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை சற்று நேரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்

பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் மூன்று பஸ்களில் அழைத்துவரப்பட்டு சிங்கள மக்கள் இன்றையதினம் பொசன் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ள நிலையில் விகாரையில் சத்தியாக்கிரகம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்

தேசிய உரிமைகள் இயக்கத்தின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் தலைமையில் 5 க்கும் மேற்பட்ட பிக்குகள் மற்றும் 200 க்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் இந்த சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

அழைத்துவரப்பட்ட சிங்கள மக்கள் மத்தியில்

தொடர்ச்சி 6ஆம் பக்கம் →







# தாயகத்தில் வலுக்கிறது பௌத்த மயமாக்கல் கூட்டமைப்பு அமைதியாக இருப்பது ஏன்?

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

போரின் பின்னரான காலத்தில் தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்தமயமாக்கல் அண்மைக்காலமாக வலுத்துவருகின்ற நிலையில் கூட்டமைப்பு மௌனம் காத்துவருவது ஏன்? என தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளதோடு கூட்டமைப்பின் மௌனம் பௌத்த மயமாக்கலை ஆதரிக்கின்றதா? என்ற சந்தேகத்தினையும் எழுப்புவதாக குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,



70 வருடகால உரிமைப்போராட்டத்தில் கௌதம புத்தரின் போதனைகள் சிங்கள, பௌத்த தேசியவாதிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டு வரும் அதே நேரம் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் திட்டமிட்ட முறையில் பௌத்த மயமாக்கலும் அதன் நீட்சியாக சிங்கள மயமாக்கலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது,

விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் முப்பது வருடங்களாக தொடர்ந்த காலத்தில் தாயகத்தில் பௌத்த, சிங்கள மயமாக்கல் என்பது கானல் நீராகவே காணப்பட்டது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

# தலைவர் பிரபாகரனுக்கு இணையாக வேறு எவரையும் கூறவே முடியாது- மைத்திரிக்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் பதிலடி

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இணையாக வேறு எவரையும் கூறவே முடியாது. இலங்கையில் இனிமேல் எவரும் பிரபாகரன் ஆகிவிட முடியாது. பிரபாகரனுடன் இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒப்பிடுவது அறிவீனம். சனாதிபதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் மத்தியிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாக இடமளிக்க வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது அபத்தமான ஒன்று என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக் காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கிளிநொச்சியில் நாம் நேரில் சந்தித்தோம். அவர் எனக்கும் எனது கட்சியினருக்கும் அமோக வரவேற்பு வழங்கியிருந்தார். சுமார் ஐந்து மணித்தியாலங்கள் எங்களுடன் அவர் மனம் விட்டுப் பேசினார். ஆனால் துரதிஷ்டவசமாக அந்தச் சமாதானக் காலம் நீடிக்கவில்லை. மீண்டும் போர் ஆரம்பமானது என தெரிவித்திருந்தார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே ரவூவ் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அவரின் இயக்கத்தினருக்குமென பெரும் ஆதரவுத் தளமிருந்தது. இப்போதும் இருக்கின்றது. அதேவேளை, அவர்களுக்கென்று ஒரு கட்டமைப்பும் இருந்தது. அரசியல் கொள்கை இருந்தது. அவர்களுக்கென்று ஒரு விடுதலைப் போராட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் குறுகிய நோக்கத்தில் இருந்ததில்லை. உரிமைகளைக் கேட்டு நிற்கும், தமிழ் மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர்களின் தாக்குதல்கள் அமைந்திருந்தன. பிரபாகரனுக்கு நிகர் அவரே. இலங்கையில் இனிமேல் எவரும் பிரபாகரன் ஆகிவிட முடியாது.

இந்தநிலையில், பிரபாகரனுடன் இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒப்பிடுவது அறிவீனம். சனாதிபதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் மத்தியிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாக இடமளிக்க வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய பயங்கரவாத அமைப்பினருக்கு கொள்கை இலட்சியம் என எதுவுமே கிடையாது. அத்துடன் இவர்களுக்கு முஸ்லிம் சமூகத்திடமிருந்து எந்த ஆதரவும் கிடையாது. அப்படியானவர்கள் பிரபாகரனின் அந்தஸ்துக்கு வந்து விடுவார்கள் என்று அச்சப்படுகின்ற அதீதமான பயம் அபத்தமானது என்றும் அந்த செவ்வியில் தெரிவித்திருந்தார். மேலும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சிறீலங்கா கிரிக்கெட் அணிக்கு எதிராக லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்!

இலங்கை அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் உலக கிண்ண கிரிக்கெட் போட்டி தற்போது லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்கோடு இலண்டனில் வாழும் தமிழர்கள் இனப்படுகொலைக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






## கூட்டாக பதவியேற்பதில் திண்டாடும் முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள்

தமது சமூகத்திற்காக கூட்டாக ஒன்பது அமைச்சர்கள் பதவி விலகினோம் என இதுநாள் வரையில் கூறிவந்த முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் மீண்டும் பதவியேற்கும் விடயத்தில் பிளவுபட்டு நிற்கின்றன.

குறிப்பாக ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் மீண்டும் பதவிகளை ஏற்பதில் பின்னடிப்புச் செய்து வருகின்றனர்.

குறிப்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எந்தவொரு பிரதிநிதியும் பதவி ஏற்பதாக இல்லை. இதனால் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் பதவி ஏற்றால் அடுத்த தேர்தலில் சிக்கலாகிவிடும் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கருதுகின்றது. ஆனால் பெரும்பான்மை கட்சியான, ஐக்கிய



தேசியக் கட்சியின் பிரதிநிதிகளான ஹபீர் காசீம் மற்றும் அப்துல் கலீம் ஆகியோர் அடுத்த தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்றால் அமைச்சுப்பதவி அவசியமாகின்றது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். அத்தடன் அவர்களின் சிங்கள வாக்காளர்களும், மாகாநாயக்கர்களின் கோரிக்கைகளை மையப்படுத்தி அழுத்தங்களை பிரயோகிக்கின்றனராம். இதனால் கூட்டாக பதவிகளை விலகிய முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் மீண்டும் கூட்டாக பதவி ஏற்பதில் திண்டாட்டமான நிலைமையில் இருக்கின்றன.

## பௌத்த சிங்கள மேலாண்மையும் தமிழ்த் தேசிய சிந்தனையும்

சிறீலங்கா சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள் தமிழீழவிடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாக தீவிரமடையத் தொடங்கிய பின்னர் தான் நெருக்கடியை சந்தித்தன அல்லது தற்காலிக இடைநிறுத்தம் கண்டன. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீடுகளை நாம் ஆராய்ந் தோமானால் கிழக்கில் சிங்கள மக்களின் குடிசன மதிப்பீடு எவ்வாறு பெரும் எண்ணிக்கையில் அதிகரித்தது என்பதை நாம் சுலபமாக விளங்கிக் கொள்ள முடியும். முள்ளிவாய்க்காலின் பின்பு இச்சிங்கள குடியேற்றங்கள் மீண்டும் தீவிரமடைய ஆரம்பித்துள்ளன. தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு நிலத் தொடர்ச்சியையும் தமிழர்களின் பெரும்பான்மையையும் இல்லாதொழிக்கும் கபட நோக்கத்துடனேயே இச் சிங்கள குடியேற்றங்களும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் இராணுவ முகாம்களும் இருந்து வருகின்றன.

அண்மைக் காலங்களாக நீராவியடிப் பிள்ளையார் கோவிலடி விவகாரமும் ஆங்காங்கே புதிதாக புற்றீசல்கள் போல் முளைத்து வருகின்ற பௌத்த விகாரைகளும் சத்தமின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சிங்களக் குடியேற்றங்களும் தமிழர்கள் மத்தியில் மீண்டும் அபாய ஒலியை எழுப்ப ஆரம்பித்துள்ளன. தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த விடயங்களில் காட்டி வருகின்ற மௌன வழி அங்கீகாரமும் மெத்தனப் போக்கும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களை விசனப்படுத்தி வருகின்றன. தமிழர் தரப்பில் இந்த விடயங்கள் தொடர்பாக அவ்வப்போது குரல் எழுப்பப்பட்டாலும் தமிழர் மரபுரிமை மையம் இந்தத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் பௌத்த விகாரை விடயங்கள் தொடர்பாகவும் ஆதாரங்களோடு அம்பலப்படுத்தி வருகின்றது. கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நாவின் 40வது மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் பங்கேற்ற தமிழர் மரபுரிமை மைய இணைத்தலைவர்களில் ஒருவரான நவநீதன் அவர்கள் ஆதாரங்களோடு இந்த விடயங்களை வெளிக்கொண்டு வந்திருந்ததும் கவனம் கொள்ளத்தக்கது.

தமிழர்களின் தாயக கோட்பாட்டுக்கும் தமிழ் மக்களின் வரலாற்று இருப்புக்கும் அச்சுறுத்தல் தருகின்ற சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த சிங்கள மேலாண்மை திணிப்புக்கானதும் அதை சுற்றி வர இருக்கின்ற பல்வேறு திட்டங்களுக்கான பௌத்த விகாரை அமைப்புக்கள், தேவையின்றிய இராணுவப் பிரசன்னங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் அறவழிப் போராட்டங்களை தீவிரப்படுத்த வேண்டிய காலத் தேவையையே அண்மைய நிகழ்வுகள் சுட்டி நிற்கின்றன. குறுகிய அரசியல் இலாபங்களை கடந்து தாயகத்தில் எம்மைச் சுற்றி பின்னப்பட்டு வருகின்ற நச்சுவலைகளை புரிந்து கொண்டு காலப்பணி ஆற்றுவதே தமிழ்த் தேசியப் பற்றாளர்களுக்கான தற்போதைய சவால். தமிழர்களுடைய பலம் முள்ளிவாய்க்காலில் முற்றாக முறியடிக்கப்பட்டுவிட்டதென்ற பௌத்த சிங்கள மேலாண்மையின் வெளிப்பாடுகளே அண்மைய செயற்பாடுகள். இதனை முழுமையாகப் புரிந்து கொண்டு சுய விருப்புகளையும் சுய நலன்களையும் கடந்து தமிழர் தரப்பு தமிழ்த் தேசிய சிந்தனையோடு காலப்பணி செய்யட்டும்.

# நாங்கள் சேர்ந்தால் சாதிக்க முடியாதது ஒன்றில்லை: கஜேந்திரகுமாரை நோக்கி விக்னேஸ்வரன் பேச்சு



"நாங்களும் கஜேந்திரகுமார் அரசியலில் நல்ல இடத்தைப் பெற வேண்டும் என்றே விரும்புகின்றோம். நாங்கள் சேர்ந்தால் எம்மால் சாதிக்க முடியாதது ஒன்றில்லை என்பது எமது கருத்து" என்று வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் விக்னேஸ்வரன் கஜேந்திரகுமாருடன் ஒன்றாக ஒரே மேடையில் கலந்து கொண்ட ஒரு நிகழ்வில் தெரிவித்தார்.

அமரர் க.மு.தர்மராஜாவின் நினைவஞ்சலிக் கூட்டம் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டபோதே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

நல்ல வேளை எனக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையில் முரண்பாடு வந்திருக்கும் இந்த நேரத்தில் அவர் இல்லாதது தம்பி கஜனுக்கு ஆறுதல் தான். கட்டாயம் நான் கூறுவதை ஏற்குமாறு கஜனை வற்புறுத்தி இருப்பார் திரு.தர்மராஜா அவர்கள்! காரணம் இன்றைய நிலை அப்படி என்பதை நண்பர் தர்மராஜா நன்றாக அறிந்திருந்தவர். வடகிழக்கை துண்டாட, படையினரை நிரந்தரமாக வட கிழக்கில் வைத்திருக்க, தமிழ் பேசும் மக்களை பயங்கரவாதிகள் என்று சித்திரிக்கத் தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்கள் யாவுமே நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளதை அவர் அறிந்திருந்தார். கடந்த 30 வருடகால யுத்தத்தில் இழந்தவற்றை விடவும் வடகிழக்கில் எமது இருப்புக்கான அடிப்படைகளை வேகமாக நாங்கள் இன்று இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளுக்கான அடித்தளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்பட்டு வருவதை நன்கறிந்திருந்தார். காணிகள் பற்றிய சட்ட அறிவைக் கொண்டிருந்த அவர் நிலம் போனால் எமது அடிப்படை நிலையே போய்விடும் என்பதைப் பலதடவைகள் கூறியும் வந்துள்ளார். நிலைமை கட்டுமீறிச் சென்றுகொண்டிருக்கின்றது என்பதை தமது அந்திம காலத்தில் கூறி அங்கலாய்த்துக் கொண்டிருந்தவர் நண்பர் தர்மராஜா அவர்கள். பலமுள்ள கொள்கைப்பற்றுள்ள தமிழ்த் தலைவர்கள் சேர வேண்டியதன் அவசியத்தை அவர் அறிந்திருந்த காரணத்தால் எனக்கு சார்பாக தம்பி கஜனிடம் சிபார்சு செய்திருப்பார் என்று கூறுகின்றேன்.

கொள்கைப்பற்றுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் சேர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நண்பர் தர்மராஜா அறிந்திருந்ததால் கஜனிடமும், கஜனின் தாயாரிடமும், அவர் கட்சி அங்கத்தவர்களிடமும் பேசி நிலைமையை புரிய வைக்கக் கூடிய ஒருவராகவே அவர் இருந்தார். கீரியும் பாம்புமாக இருந்த தமிழ்த் தலைவர்கள் முன்னர் தமிழ் மக்கள் நலம் கருதி ஒன்று சேர்த்ததை அவர் மறந்திருக்கவில்லை. அவரின் மறைவு என்னைப் பலம் இழக்கச் செய்து விட்டது என்று கூறலாம். கஜேந்திரகுமார் மீது அவருக்கு அலாதியான பாசமும் மரியாதையும் இருந்தது. 'இந்தப்பிள்ளை நல்லதொரு சட்டவல்லுநர் வாழ்க்கையைத் தியாகம் செய்துவிட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளது. அவருக்கு என்னதான் இல்லை? ஏன் தான் கட்சி அரசியலுக்குள் சென்று சீரழிகின்றாரோ தெரியவில்லை' என்று கூறுவார். கஜேந்திரகுமார் தனது தந்தை போல் பாட்டனார் போல சட்டத்துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

ஆனால் கஜனின் அரசியல் பிடிவாதம் அவருக்கு ஆத்திரத்தை ஊட்டவில்லை. பாசத்தையே கூட்டியது. தொடர்ந்து கஜேந்திரகுமார் அரசியலில் நன்றாகச் செய்ய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். நாங்களும் கஜேந்திரகுமார் அரசியலில் நல்ல இடத்தைப் பெற வேண்டும் என்றே விரும்புகின்றோம். நாங்கள் சேர்ந்தால் எம்மால் சாதிக்க முடியாதது ஒன்றில்லை என்பது எமது கருத்து."

## பொதுவாக்கெடுப்புக்கு தயாராகும் சிறிசேன முதலில் நாடாளுமன்ற தேர்தலை நடத்த முயற்சி



அதிபர் தேர்தலுக்கு முன்னதாக, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்களின் அனுமதியைக் கோரும் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு சிறீலங்கா சனாதிபதி திட்டமிட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

வரும் டிசெம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னதாக சனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ள நிலையில், அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் வகையில், பொதுவாக்கெடுப்புக்கு அழைப்பு விட சிறீலங்கா சனாதிபதி திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது.

அவரது இந்த யோசனைக்கு, சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா சாதகமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும், சிறீலங்கா சனாதிபதியின் சட்ட ஆலோசகர் இந்த நகர்வு குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சனாதிபதி தேர்தலுக்கு முன்னர், நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அனுமதி கோரும் பொதுவாக்கெடுப்பை நடத்தும் இந்த திட்டத்துக்கு, ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா பொதுஜன பெரமுனவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. திட்டமிட்டபடி முதலில் சனாதிபதி தேர்தலே நடத்தப்பட வேண்டும் என்று இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## தாயகத்தில் வலுக்கிறது

ஆனால் தற்போது மேற்படி விடயங்கள் முழு வீச்சில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

2009ஆம் ஆண்டுக்கு பின்னரான காலத்தில் பௌத்த விகாரைகள், சிலைகள், அடையாளங்கள் என 463 நிர்மாணங்கள் தாயகத்தில் மட்டும் நடைபெற்றிருக்கின்றன. மேலதிக நிர்மாணங்களும், ஆக்கிரமிப்புக்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இதனைவிடவும் 1000 விகாரைகள் தாயகத்தில் அமைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. பௌத்த சாசன அமைச்சின் கீழ் பௌத்த நிர்மாணங்களுக்காக 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி கடந்த வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தாயகத்தினை இலக்கு வைத்து பௌத்த மயமாக்கல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதனை விடவும் இலங்கை ஒரு பௌத்த நாடு, பௌத்த சமயத்திற்கே முன்னுரிமை என்பதை கூட்டமைப்பின் நட்பு ஆட்சியாளர்கள் திரும்பத்திரும்ப அழுத்திக் கூறுகின்றனர்.

தமிழர்களுக்கு விடிவெள்ளியாக அமையப்போவதாக கூறிய புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையில் கூட பௌத்தத்திற்கான முன்னுரிமையோ, பௌத்த நாடு என்பதிலோ எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

மாறாக இலங்கை பௌத்த நாடு என்பதிலும் பௌத்த மத்திற்கு முன்னுரிமை அளிப்பதை கூட்டமைப்பு எதிர்க்கவில்லை என்றுமே இடைக்கால அறிக்கையை தயாரித்தவர்களுள் ஒருவரான சனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதிவிக்கிரமரட்ணவும் வெளிப்படையாக கூறியிருக்கின்றார்.

இதனை விடவும், இலங்கையின் சபாநாயகர் தலைமையில் சென்றிருந்த குழுவினர் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தபோது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதை கூட நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்றும்கூறியிருந்தார். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்களே என்று மார்பு தட்டும் கூட்டமைப்பினர், தாயக மண்ணில் வரலாற்றுப் பாரம்பரியத்தினை கொண்ட இனம் தமிழினம் என்பதை உணர்ந்து பௌத்த மயமாக்கலுக்கு எதிராக நிற்க முடியாதிருப்பது ஏன்? பௌத்த மயமாக்கலின் நீட்சியாகவே சிங்கள மயமாக்கல் நடைபெறுகின்றது என்பதை உணர்ந்து கொள்ள முடியாதிருப்பது ஏன்? இலங்கை பௌத்த, சிங்கள நாடாக இருந்தாலும், தமிழர்களின் தாயகத்தில் அவற்றுக்கு இடமளிக்க முடியாது என்று இடித்துரைக்க முடியாதிருப்பது ஏன்?

பௌத்த நிர்மாணங்கள், தனியார்களின் காணிகளை அபகரித்து முன்னெடுக்கப்படுகின்ற போது, சனநாயகத்தின் பால் ஆட்சியையே தூக்கி நிறுத்தியிருக்கின்றோம் என்று கூறும் கூட்டமைப்பினால் முறையான அணுகுமுறைகளூடாக அவற்றை முளையிலேயே கிள்ளியெறிய முடியாதிருப்பது ஏன்?

போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகளிலேயே பௌத்தமயமாக்கல் தமிழர்களின் தாயகத்தில் கழுத்தளவிற்கு வந்தாகி விட்டது. மூக்களவில் வந்து மூச்சு முட்டுகின்றபோது கூட்டமைப்பால் என்ன செய்ய முடியும். ஒருவேளை கூட்டமைப்பின் முண்டுகொடுப்பிற்கு பிரதியுபகாரமாக ரணில் அரசு அதிகாரங்களை பகிர்ந்தால் தாயகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த நிர்மானங்களில் ஒன்றாவது அகற்றப்படுமா?

"விடுதலைப்புலிகளோ, தமிழ் மக்களோ பௌத்தத்திற்கோ சிங்கள மக்களிற்கோ எதிரானவர்கள் அல்லர். ஆனால் தாயகத்தில் அடக்குமுறை செய்வதற்காக திணிக்கப்படும் பௌத்த சிங்கள மயமாக்கலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று வெளிப்படையாக கூறிய அந்த மக்கள் தலைவனின் கருத்துக்களையாவது தாயக மக்களின் வாக்குகளை பெற்று சொகுசு வாழ்க்கையை நகர்த்தும் கூட்டமைப்பின் தலைமை நெஞ்சில் நிறுத்துமா? என்றுள்ளது.

# ஈழத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவருவது சாத்தியம்.


## தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் சிறப்பு பேட்டி

**தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் அவர்கள் தமிழக அரசியலையும் தாண்டி உலகத் தமிழர்கள் மத்தியில் மிகவும் அறியப்பட்டவர். சொல்லுக்கு முன் செயல் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வேல்முருகன் அவர்கள் தேர்தல் அரசியலுக்கு அப்பால் மக்களின் உரிமைகளுக்கான அனைத்து போராட்டக்களங்களையும் தனதாக்கியவர். அரசியல் முரண்பாடுகளை கடந்து மக்களின் உரிமைக்கான போராட்டங்களில் அனைத்து அரசியல் சிவில் இயக்கங்களையும் ஒருங்கிணைக்கும் ஆளுமை மிக்கவர். ஈழத் தமிழர்களின் உரிமைக்காகவும் தமிழகத்தின் உரிமைக்காகவும் தீவிரமாக போராட்டங்களை முன்னெடுத்து உலகத் தமிழர்களின் கவனத்தை பெற்றவர். இவர் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு பேட்டி**



**2009 பின்னர் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக மிகப்பெரிய அளவில் அறவழியிலான போராட்டங்களை பரந்த அளவிலே முன்னெடுத்தீர்கள். ஆனால் அண்மைக் காலமாக இதன் வீரியம் சற்று குறைவடைந்துள்ளமைக்கு என்ன காரணம்?**

நான் 2009 முள்ளிவாய்க்கால் அவலத்திற்கு பின்னர் போராட்டக்களத்திற்கு வந்தவன் இல்லை. 1983 இல் அரசு ஏவிவிட்ட கறுப்பு யூலைக் கலவரத்திலே ஆயிரக்கணக்கான எமது தொப்புள் கொடி உறவுகள் உயிரையும் உடமைகளையும் இழந்து நிர்க்கதியாக நின்றதும் குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட போராளிகளின் படுகொலை என்னில் ஏற்படுத்திய தாக்கத்தினால் மாணவர் பருவத்திலிருந்தே நான் தமிழீழ விடுதலையை நெஞ்சில் நிறுத்தி ஈழத் தமிழர்களுக்கும் அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் களமாடிய விடுதலைப் புலிகளுக்கும் என்னாலான உதவிகளை எந்தவொரு விளம்பரமும் இன்றி செய்ததையும், தற்போதும் தொடர்ந்து செய்து வருவதையும் போராளிகளும் ஈழத் தமிழர்களும் நன்கு அறிவார்கள்.



நான் தமிழக வாழ்வுரிமை கட்சியை நிறுவிய பின்னர் வெறும் சம்பிரதாய போராட்டங்களையும், மேடை பேச்சுக்களையும் தவிர்த்து ஈழத் தமிழர்களின் உரிமைக்காக பல்லாயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டி தமிழீழத்தில் இலங்கை அரசு மேற்கொண்ட இனப்படுகொலைக்கு பன்னாட்டு புலனாய்வு மற்றும் அரசியல் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பு உள்ளிட்ட முழக்கங்களை முன்வைத்தும் மாபெரும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தேன். மேலும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் மற்றும் மாவீரர் தினம் உள்ளிட்ட நினைவேந்தல் நிகழ்வுகளையும் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம்.

நான் எனது கட்சி பணிகளுக்காகவோ போராட்டங்களை முன்னெடுப்பதற்காகவோ ஈழத் தமிழர்களின் பணத்திலோ, புலம்பெயர்ந்த மக்களிடத்திலோ, இங்குள்ள செல்வந்தர்களிடத்திலோ ஒரு ரூபா பணத்தை கூட பெற்றுக்கொள்வதில்லை. கட்சி சார்பில் முன்னெடுக்கப்படும் அனைத்து சனநாயக கடமைகளையும் எனது சொந்த பணத்திலிருந்தும் எனது கட்சிக்காரர்கள் வழங்கும் நிதியிலிருந்துமே மேற்கொண்டு வருகின்றேன்.

கட்சி ஆரம்பித்ததிலிருந்து எனது வாழ்க்கை முழுவதுமே போராட்டக்களமாக இருந்தது கடந்த எட்டு வருடங்களாக தொடர்ந்து ஈழத் தமிழர்களின் போரட்டங்களில் தீவிர கவனம் செலுத்தி வந்தேன். அண்மைக்காலமாக மத்திய அரசின் திட்டங்கள் பல தமிழகத்திற்கு பேராபத்துக்களை ஏற்படுத்துவதால் தமிழகத்தின் உரிமைக்கான போராட்டங்களில் அதிகம் கவனம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளதால் தமிழீழ விடுதலைக்கு ஆதரவான போராட்டங்கள் சற்று குறைவான தோற்றத்தை வெளிப்படுத்தலாம். ஆனால் அது உண்மையில்லை. எம்மை பொறுத்த மட்டில் தமிழகமும் தமிழீழமும் இரு கண்களை போன்றது. ஈழத் தமிழர்களின் உரிமைக்காக எனது குரல் இறுதிவரை ஓங்கி ஒலிக்கும்.

இங்குள்ள முன்நாள் போராளிகளுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் எங்களால் முடிந்த பல்வேறு உதவிகளை தற்போதும் செய்து வருகின்றோம். அண்மையில் தமிழகத்தை சூறையாடிய கஜா புயலில் ஈழத் தமிழர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டபோது இலட்சக்கணக்கான ரூபா பணத்தில் உதவி திட்டங்களை வழங்கினோம். எமது உயிர் உள்ளவரை தமிழகத்தின் உரிமைக்காகவும் ஈழத் தமிழர்களின் விடிவிற்காகவும் நானும் எனது கட்சியினரும் போராடிக்கொண்டே இருப்போம்.

**பன்னாட்டுப் புலனாய்வுக்காகவும் பொதுவாக்கெடுப்புக்காகவும் தமிழ்நாட்டு சட்டப் பேரவையில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக நடக்க வேண்டியது என்ன?**

1983 இல் நடந்த இனக்கலவரத்தை இனப்படுகொலை என குற்றஞ்சாட்டி அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் பேசினார். ஆனால், இறுதிப்போரில் நடந்த படுகொலைகளை இந்திய அரசு இன்றைக்குவரை இன அழிப்பு என்றுகூட ஏற்கவில்லை. அந்த படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதிலும் அக்கறை செலுத்தவில்லை. மாறாக இன அழிப்பு செய்த இலங்கையைப் பாதுகாத்து வருகின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இலங்கையில் இறுதிப் போரில் நடந்தது இனப்படுகொலை என இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழக தீர்மானத்தின்படி, இலங்கை அரசுடனான அரசியல், பொருளியல், பண்பாடு என அனைத்து உறவுகளை இந்திய அரசு துண்டித்துக் கொள்ள வேண்டும். இதில் குறிப்பாக, அரசியல் வகையில் இந்திய இலங்கை உறவு நீடிப்பதை எதிர்த்து தமிழகம் கடுமையான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இருநாட்டு அரசத் தலைவர்களின் பயணங்களுக்கும் சந்திப்புகளுக்கும் எதிராக தமிழகம் போர்க்கொடி உயர்த்த வேண்டும்.

**ஈழத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவருவது சாத்தியமா? அதற்கு தமிழ்நாட்டுத் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?**

ஈழத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவருவது சாத்தியம். இன்று இலங்கையை சீனா ஒருபுறமும் அமெரிக்கா ஒருபுறமும் பாகிஸ்தான் ஒருபுறமும் என்று பல உலக நாடுகள் தமது செல்வாக்கிற்குள் கொண்டுவர முயல்கின்றன. இந்த நிலைமை தொடரும்பட்சத்தில் இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். அவ்வகையில் இலங்கைக்கு அருகிலே

தொடர்ச்சி →

தொடர்ச்சி →

இருக்கும் தமிழகத்திற்கும் இதனால் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படும். தெற்காசிய பிராந்தியத்தில் முக்கியமான நாடாக விளங்கும் இந்தியா தனக்கு இப்படியான புவிசார் அரசியல் அழுத்தங்கள் மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகள் ஏற்படும்போது இலங்கை தீவில் சரியான நட்பு சக்தியை அடையாளம் காணவேண்டிய கட்டாயம் ஏற்படும். இது இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய புறக்காரணியாக அமையும்.

இன்னொருபுறம், இந்திய-சிங்கள கூட்டணியை முறிப்பதற்கான போராட்டங்கள் எந்தளவுக்கு தமிழ்நாட்டில் தீவிரம் பெறுகின்றனவோ அந்தளவுக்கு அது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும். இதன் வளர்ச்சிப் போக்கில், தமிழகத்தில் கொதிநிலை ஏற்படும் இடத்து இந்திய சிங்கள கூட்டு முறிக்கப்பட்டு இந்திய-ஈழ நட்புக்கான வெளியுறவுக்கொள்கை மாற்றம் ஏற்படும். இது இந்தியாவின் வெளியுறவு கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அகக்காரணியாக அமையும்.

எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவருவதற்கு ஈழம் தொடர்பில் தமிழக சட்டசபை நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை ஏற்கும்படி இந்திய அரசை நிர்ப்பந்தித்து போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.



### தங்கள் ஆதரவு பெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இருந்து 38 பேர் நாடாளுமன்றம் செல்லும் நிலையில் ஈழத் தமிழர்கள் தொடர்பில் அவர்கள் செய்ய வேண்டியதென்ன என்று கருதுகிறீர்கள்?

ஈழத்தில் நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு துணைபோன காங்கிரசு கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளர்களை நாங்கள் ஆதரிக்கவில்லை அவர்களுக்கு ஆதரவாக தேர்தல் பரப்புரையில் ஈடுபடவும் இல்லை. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் உள்ள தி.மு.க மதி.முக. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சிபிஐ, சிபிஐ(எம்), இந்திய ஜனநாயக கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி போன்ற கட்சிகளைத்தான் நாங்கள் தேர்தலில் ஆதரவு தந்து பரப்புரையை முன்னெடுத்தோம். இந்த கட்சிகளிடத்தில் நாம் ஏற்கெனவே சில வலுவான கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறோம். ஈழத்தில் நடந்தது மாபெரும் இனப்படுகொலை என்றும் அதற்கு சர்வதேச ரீதியான நீதி விசாரணை நடத்த வேண்டும் என்றும் அதற்கு இந்தியா உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளோம். மேலும் தமிழகத்திலே தஞ்சமடைந்து வாழ்ந்துவரும் ஈழத் தமிழர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்கான இரட்டை குடியுரிமை, இங்குள்ள ஈழத்து மாணவச் செல்வங்களுக்கு மருத்துவம், சட்டம் உள்ளிட்ட உயர்கல்விகளில் பாரபட்சமின்றி சம வாய்ப்பளிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். இதன் அடிப்படையில் நாங்கள் ஆதரவு தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவார்கள் என்று நம்புகின்றோம். இந்த விடயத்தில் கூட்டணி கட்சிகளிடத்தில் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

### தற்போது முள்ளிவாய்க்கால் நினைவு 10 ஆவது ஆண்டை நெருங்கிய வேளையில் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் 80 வீதமானவர்கள் தமிழர்களே இறந்துள்ளனர் இது குறித்து தங்கள் கருத்து?

இந்த தாக்குதல் குறித்து முன்பே உளவுத் தகவல் இலங்கைக்கு வழங்கப்பட்டபோதிலும் கொல்லப்படப் போவது கிறித்தவர்கள் என்பதாலும் அதிலும் தமிழர்கள் என்பதாலும் இந்த தாக்குதலை சிங்கள பௌத்தப் பேரினவாதிகள் அனுமதித்துள்ளார்கள் என்பது வெளிப்படையாக தெரிகிறது. இப்போது இந்த தாக்குதலின் பெயரால் சிங்கள இராணுவத்தின் மீது பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என்ற தமிழர்களின் பத்தாண்டு காலப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான தீவிர முயற்சிகளை இலங்கை அரசும் அதன் உளவுத்துறையும் முன்னெடுத்து வருகிறது அதுமட்டுமின்றி, தமிழர்களை அழிப்பதற்காக முஸ்லிம்களை அணைத்த சிங்களப் பௌத்த பேரினவாதிகள், தற்போது முஸ்லிம்களையும் அடக்கி ஒடுக்கி சிங்களப் பௌத்த மேலாண்மையை நிறுவுவதற்கு இந்த தாக்குதலைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இலங்கை அரசு சிங்களப் பௌத்த பேரினவாத இன அழிப்பு அரசு என்பதை இப்போதேனும் உலகம் புரிந்துகொள்ள வேண்டும். சிங்கள பேரினவாதத்தின் சூழ்ச்சியை உணர்ந்து தமிழர்களும் அங்குவாழும் முஸ்லீம்களும் இணைந்து செயற்படுவதன் ஊடாகவே பௌத்த பேரினவாதிகளிடமிருந்து தற்பாதுகாத்துக்கொள்ள முடியும்.

---

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்தர்ப்பவாதி

### அருட்தந்தை மா.சக்திவேல்





பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் யாரோ ஒருவரின் அரசியலுக்கு பின்னால் நின்று அந்த அரசியலை பாதுகாப்பதற்காக தனது சமய நிறுவனத்தின் அடையாளத்தை பயன்படுத்துகின்றார் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நாடு சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானது என்று கூறுபவர்களை மல்கம் ரஞ்சித் திருப்திப்படுத்த முனைகிறாரா இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானது என்று அவரும் பல தடவை கூறியுள்ளார்.

ரத்தின தேரரின் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சார்பானது என்றால் எமது அரசியல் கைதிகள் பல போராட்டங்களை செய்தனர், உண்ணாவிரதம் இருந்தனர், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இரு ஆண்டுகளாக போராடுகிறார் அவர்களுக்கு மத்தியில் சென்று ஒருநாள் அவர் உட்கார்ந்திருந்தாராவென கேள்வி எழுப்பியுள்ளார்.

2 ஆம் பக்க தொடர்ச்சி →

## இன்று முல்லைத்தீவில் பிக்குகள் தலைமையில்




உரையாற்றிய பௌத்த பிக்குகள் இந்த பகுதியில் பிள்ளையார் ஆலயம் இருந்ததாக தமிழ் மக்கள் பொய்களை கூறிவருவதாகவும் இங்கே குருகந்த ரஜமஹா விகாரை என்ற விகாரையே பல ஆண்டுகளாக இருந்ததாகவும் ஆனால் இப்போது அந்த விகாரையில் வழிபட முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாவும் தெரிவித்துள்ளனர்

இந்த சர்சைக்குரிய ஆலயப்பகுதியில் இரண்டு தரப்பினரும் அமைதிக்கு பங்கமின்றி வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று கடந்த மே மாதம் 6 ஆம் திகதி தீர்ப்பு வழங்கிய நிலையில் இரண்டாவது தடவையாகவும் பௌத்த பிக்குகளால் சிங்கள மக்கள் அழைத்து வரப்பட்டு இந்த சம்பவம் இடம்பெறுகிறது. இதேவேளை விகாரை பெயர்ப்பலகை அகற்றப்பட்டமை தொடர்பில் சற்று நேரத்தில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபடவுள்ளனர்.

# அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழினம் காத்திரமான முடிவை மேற்கொள்ளவேண்டும்

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

சிறீலங்காவில் கடந்த ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள், அதன் தொடர்ச்சியாக சிறுபான்மை இனத்திற்கு எதிராக சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்ட வன்முறைகள் என்பவற்றுக்கிடையில் தற்போது இந்தியப் பிரதமர் அவசரமாக சிறீலங்கா வந்து சென்றுள்ளது பல அரசியல் கருத்துருவாக்கங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்தியப் பிரதமரின் பயணம் பூகோள அரசியல் நலன்சார்ந்தது என்பது ஒருபுறமிருக்க மறுபுறத்தில் அமெரிக்காவுடனான பொருளாதார போரை சமாளிக்கும் வழிகளைத் தேடுகின்றது சீனா. அதன் முதற் கட்டமாக ரஸ்யாவுக்குச் சென்ற சீனா அரச தலைவர் புட்டினின் ஆதரவைப் பெற்றுள்ளதுடன், சீனாவுக்கும் ரஸ்யாவுக்குமிடையான வர்த்தகத்தையும் 2020 ஆம் ஆண்டு இரு மடங்காக அதிகரிப்பதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளார். அதாவது 200 பில்லியன் டொலர் வர்த்தகத்திற்கான ஒப்பந்தம்.

அதேசமயம் இந்தியாவின் ஆதரவையும் தம்முடன் இணைத்துக்கொள்ள சீனா மற்றும் ரஸ்யா முற்படுவதாகவும், இந்த வாரம் இடம்பெறும் சங்காய் கூட்டமைப்பு மாநாட்டில் அதற்கான நிலை எட்டப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்குலகத்தின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு கூட்டணிக்கு இணையாக சீனாவினால் உருவாக்கப்பட்டதே இந்த கிழக்கு பிராந்திய நாடுகளின் கூட்டணி.

இந்தியாவையும், ரஸ்யாவையும் இணைக்கும் சீனாவின் முயற்சி வெற்றி பெற வாய்ப்புக்கள் உள்ளதாகவே ஹொங் ஹொங்கைத் தளமாகக் கொண்ட லிங்கன் பல்கலைக்கழகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய கற்கை நெறிகளுக்கான பணிப்பாளர் சாங் போகி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு கடந்த 30 வருடங்களாக வழங்கப்பட்டு வந்த வரிச் சலுகைகளை டொனால் டிறம் அரசு நீக்கியது. இந்தியாவின் இந்த மாற்றத்திற்கான காரணமாக கூறப்பட்டாலும், தனது கொல்லைப்புறத்தில் அமெரிக்கா நுழைவதை இந்தியா விரும்பப்போவதில்லை என்பதே உண்மை. அது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் என்பது இந்தியாக் கொள்கைவகுப்பாளர்களின் கருத்து.

ரஸ்யாவின் மிகப்பெரும் வர்த்தக பங்காளியாக சீனா உள்ள அதேசமயம், சீனாவின் பிரதான எரிபொருள் வினியோகஸ்த்தராக ரஸ்யா உள்ளது. எனவே தமது பங்கு முறிகளை சீன நாணயத்தில் மேற்கொள்வதற்கு ரஸ்யாவின் 15 இற்கு மேற்பட்ட வங்கிகளும், நிறுவனங்களும் விரும்பம் தெரிவித்துள்ளதுடன், டொலரின் பாவனையை குறைப்பதற்கு சீனாவும், ரஸ்யாவும் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மறுவளமாக சீனாவின் படைத்துறையையும், பொருளாதாரத்தையும் முடக்குவதற்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பொருளாதாரப்போர் ஒருபுறம் உக்கிரம் பெற்றுவரும் அதேசமயம், அதிக வளர்ச்சி கண்டுவரும் சீனாவின் கடற்பலத்தை முடக்குவதற்கு இந்துசமுத்திரப் பிராந்தியத்தை குறிவைத்துள்ளது அமெரிக்கா. அதுவே மகிந்தாவின் வெளியேற்றத்திற்கும், சிறீலங்காவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குமான காரணம். ஆனால் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான மேற்குலகத்தின் பொம்மை அரசுக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ளார் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறீசேன. மகிந்தாவுக்கு ஆதரவாக அவர் மாறியதன் பின்னனியில் இந்தியாவே உள்ளதாக நம்பப்படுகின்றது.

ஆனால் இந்தியாவுக்கு படைத்துறை ரீதியாக மேற்கொள்ளும் உதவிகள் மூலம் தனது நகர்வுகளை சுலபமாக்க அமெரிக்கா முற்படுகின்றது. எனவே தான் அப்பாச்சி வகை தாக்குதல் உலங்குவானூர்திகள் மற்றும் ஆளில்லாத விமானங்கள் என்பவற்றை வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது.



இந்த பூகோள மோதல்களிற்கு இடையே சிறீலங்காவின் அரச தலைவர் தேர்தல் தொடர்பிலும் இந்த நாடுகள் தமது கவனத்தைச் செலுத்த தவறவில்லை. இதனால் சிறீலங்காவின் நிலமை தற்போது மேலும் மோசமாக்கியுள்ளது. சிறீலங்காவில் ஆட்சி மாற்றத்தை தீர்மானிக்கும் முயற்சிகளை அமெரிக்காவும், இந்தியாவும் இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே ஆரம்பித்துவிட்டன.

எனவே தான் கோத்தபாய ராஜபக்சா மீதான வழக்கு அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது, ரணில் அரசின் பொருளாதரத்தின் மீது மேற்குலகம் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. சிறீலங்காவுக்கான ஜி.எஸ்.பி வரிச்சலுகைகளை மீண்டும் வழங்கிய ஐரோப்பிய ஒன்றியம், தற்போது பயண எச்சரிக்கைகளையும் அவசரமாக நீக்கியுள்ளது. சிறீலங்காவின் மொத்த ஏற்றுமதியில் 29 விகிதமானவை ஐரோப்பிய நாடுகளுக்கானவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதாவது ஏப்பிரல் 21 ஆம் நாள் இடம்பெற்ற குண்டு வெடிப்பும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகளும், முஸ்லீம் அமைச்சர்களின் ஒட்டுமொத்த பதவி விலகலும் சிறீலங்காவில் ஏற்படவுள்ள அரசியல் மாற்றத்திற்கானதும் அதற்கு எதிரானதுமான போராட்டங்களின் விளைவுகள் ஆகும்.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவருக்கான தேர்தலின்போதும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், தற்போது முஸ்லீம் மக்களின் வாக்குகள் ஒரு அணியில் சேர்ந்துள்ளதாகவும், அதனை கைப்பற்ற தற்போதைய ரணில் அரசு முற்படுவதாகவும் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்த கூற்றை உறுதிப்படுத்துவது போலவே அவர் கருத்து வெளியிட்ட நாளுக்கு மறுநாள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் முஸ்லீம் மக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பின்னரே ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

அதாவது மேற்குலகம் தனக்கு சார்பான அரசு ஒன்றை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்துவிட்டது. இந்தியாவும் தனக்கு சார்ப்பான அரசு ஒன்றை தெரிவு செய்வதற்கான பணியை ஆரம்பித்துவிட்டது, அதற்காகவே மோடி அவசரமாக சிறீலங்கா வந்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடில்லிக்கு வருமாறு அழைத்ததன் பின்னனியும் அதுவே.

ஆனால் சிறீலங்காவின் அரசியல் நகர்வுகளை துல்லியமாக எடைபோட்டு தமக்கான ஒரு பாதையை உருவாக்க வேண்டிய தமிழ் இனம் அமைதியாக இருப்பது என்பது தமிழ் மக்களிடம் உருவாக்கியுள்ள ஒரு அரசியல் வெற்றிடமாகவே பார்க்க முடியும்.

சிறீலங்காவில் இடம்பெறவுள்ள அரசியல் மாற்றம் என்பது ஐக்கிய நாடுகள் சபைவரை எதிரொலிக்கும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த ஆண்டின் இறுதியில் இடம்பெறவுள்ள அரச தலைவருக்கான தேர்தலின் முடிவில் தான் ஐ.நா மனித உரிமை அமைப்பின் முன் நாம் மேற்கொண்டுவரும் நீதிக்கான போராட்டத்தின் நீட்சியும், திருப்பமும் தங்கியுள்ளது.

எனவே புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், தாயகத்து தமிழ் அமைப்புக்களும் ஒருங்கிணைந்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டியதுடன் அதற்கான தயார்ப்படுத்தல்களை தமிழ் மக்களிடம் தற்போதே ஆரம்பிக்கவும் வேண்டும்.

மகிந்த ராஜபக்ச அரசோ அல்லது ரணில் அரசோ தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மைகளையும் வழங்கப்போவதில்லை என்பதுடன், மாறி மாறி ஆட்சி அமைக்கும் எல்லா அரசுகளும் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பை மேற்கொண்டே வருகின்றன.

எனவே அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் பங்கெடுப்பதை நிறுத்துவதா? அல்லது தமிழர் ஒருவரை தேர்தலில் நிறுத்தி அவருக்கு வாக்களிப்பதன் மூலம் வாக்களிக்கும் உரிமைகளை தக்கவைக்கும் அதேசமயம் சிறீலங்காவின் தேர்தலை முற்றாக புறக்கணிக்கும் நிலையை நாம் உருவாக்குவதா? என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இதன் மூலம் எம்மை தொடர்ந்து ஏமாற்றும் மேற்குலகத்திற்கும், பிராந்திய வல்லரசுகளுக்கும் நாம் ஒரு காத்திரமான செய்தியை பதிவுசெய்ய முடியும், ஏனெனில் கடும்போட்டியாக மாறப் போகும் தென்னிலங்கை தேர்தலில் அரச தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குகள் சிறுபான்மை மக்களுடையதாகவே இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

எனவே தான் இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடில்லிக்கு அழைக்க, ஐரோப்பிய ஒன்றியம் முஸ்லீம் மக்கள் மீது பாசத்தை காட்டுகின்றது.

# நீராவியடியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை பௌத்த மயமாக்க இரகசியத் திட்டம்

## அம்பலப்படுத்துகின்றார் நவநீதன்



முல்லைத்தீவு செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் கோவில் விவகாரம் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்தப் பகுதி பதற்றமாகவே இருக்கின்றது. அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் இவ்வார ஆரம்பத்தில் நிலைமைகளை நேரில் ஆராய்வதற்காக அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தார்கள். அந்தப் பகுதியை ஆக்கிரமித்து புத்தர் சிலை ஒன்றையும் அமைத்துவிட்டு, பாரிய கட்டுமாணப் பணிகளை அமைப்பதற்கான முயற்சிகளில் திறந்துவைக்கப்பட்டது. பௌத்த மதத்தைப் பின்பற்றும் எவரும் வசிக்காத அந்தப் பகுதியில், புத்தர் சிலை அமைக்கப்பட்டது, அந்தப் பகுதியை சிங்கள மயப்படுத்துவதை விட வேறு நோக்கங்களுக்காக இருக்க முடியாது.

இதற்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, இரண்டு தரப்பும் அங்கு வழிபாட்டில் ஈடுபடலாம் எனவும், ஆனால், அபிவிருத்தி கட்டுமாணப் பணிகளில் ஈடுபடுவதாயின் உரிய உள்ளூர்

### ✪ பௌத்த மயமாக்கல் கொள்கை வகுப்பாளர்கள் பின்னணியில் குடியேற்றங்களைப் பாதுகாக்கவே இராணுவப் பிரசன்னம்

### ✪ தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக 337 இடங்கள்

தீவிரமாகவுள்ள பிக்கு, சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்காமல் எந்தளவுக்கு அடாத்தாகச் செயற்படுகின்றார் என்பதை அவர்களினாலும் அவதானிக்க முடிந்தது.

போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்கள் சென்றுள்ள நிலையில், புதிய வடிவத்தில் முன்னெடுக்கப்படும் இந்த வகையான ஆக்கிரமிப்பு வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்குவதையே இலக்காகக் கொண்டது. செம்மலைப் பகுதியின் அமைதியைக் குலைத்துள்ள குறிப்பிட்ட பிக்கு,



உண்மையிலேயே ஒரு பௌத்த துறவியா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டிருக்கின்றது. ஏனெனில் இத்துறவியின் இரண்டு பிள்ளைகள் இங்கிலாந்தில் கல்வி கற்பதாகச் சொல்லப்படுகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலமாக விளங்கிய நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளவில் தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் கடந்த சனவரியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டதுடன்தான் இங்கு பிரச்சினை ஆரம்பமாகியது. இதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, காவல் துறையினரின் ஆதரவுடன் அந்த புத்தர் சிலை

அமைப்புக்களின் அனுமதியுடனேயே அதனைச் செய்யலாம் எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், அங்குள்ள தற்போதைய நிலை என்ன என்பதையிட்டும், அமைச்சர் மனோ கணேசன் அங்கு மேற்கொண்ட விஜயம் குறித்தும், "தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர் வீ.நவநீதனிடம் கேட்டோம். அவர் தெரிவித்ததாவது:

"கோவில் தரப்பைப் பொறுத்தவரையில் அந்தக் காணி எம்முடையதுதான் என்பதை உறுதிப்படுத்தும் கடிதமும், பிரதேச சபையின் அனுமதி போன்றவற்றைப் பெற்றுத்தான் வேலைகளைத் தொடங்கியிருந்தோம். ஆனால், பிக்குவைப் பொறுத்தவரையில், அவ்வாறான ஆவணங்களோ அனுமதியோ இல்லாமலே கட்டுமாணப் பணிகளை முன்னெடுத்திருந்தார். இது குறித்து நாம் காவல் துறையினருக்கு பல தடவை முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அமைச்சர் மனோ கணேசன் கடந்த செவ்வாய்க்கிழமை இங்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதும் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அப்போது, நாம் நீதிமன்ற உத்தரவின்படியே செயற்படுகின்றோம் என்பதையும், பிக்கு அவ்வாறில்லாமல் கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தபோது, காராசாரமான விவாதம் ஒன்று அங்கு இடம்பெற்றது.

அதன்பின்னர் அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் இந்த விடயத்தில் தலையிட்டு தற்போதுள்ள கட்டுமாண வேலைகள் குறித்து ஒளிப்பதிவு ஒன்றைச் செய்யுமாறு மனோ கணேசன் கேட்டிருந்தார். அதன்படி அவ்வாறான ஒளிப்பதிவு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி அனுமதியில்லாமல் புதிய கட்டுமாணப் பணிகள் எதனையும் செய்ய முடியாது. உரிய அனுமதியுடன் வரும் தரப்பை, கட்டுமாணப் பணிகளைச் செய்வதற்கு காவல் துறை ஒத்துழைக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது."

**கேள்வி: இது தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்ட ஒரு பகுதியா?**

நவநீதன்: கோவில் உள்ள பகுதியை தாம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி என தாம் பிரகடனம் செய்யவில்லை என தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரே பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றார். ஆனால், வீதியின் எதிர்ப்பக்கத்தில் விடுதலைப் புலிகளின் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் ஒன்று இருந்தது. அது செங்கல்லினால் கட்டப்பட்டது. அந்த செங்கல்லை எடுத்துவைத்துக்கொண்டு அதனை தொல்பொருள் என்று சொல்கின்றார்கள். 2013 ஆம் ஆண்டு இந்தப் பகுதியை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாகப் பிரகடனப்படுத்துவதாக வர்த்தமானி அறிவிப்பு ஒன்று வந்தது. அது முறையாக நீலஅளவீடு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட அறிவிப்பு அல்ல. அத்துடன் இடமும் செட்டிமலை என்றே போடப்பட்டிருக்கின்றது. செட்டிமலை என்று ஒரு இடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இல்லை. அதனால், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என நாம் நீதிமன்றத்தில் சொன்னோம். இப்போது அந்த வர்த்தமானி அறிவிப்பை மாற்றி வெளியிடுவதற்கான முயற்சி ஒன்று இடம்பெறுவதாகவும் அறிய முடிகின்றது.

**கேள்வி: அப்படியானால், குறிப்பிட்ட பிக்குவால் செம்மலையில் குடியேறி புத்த விகாரை ஒன்றையும் எவ்வாறு அமைக்க முடிந்தது?**

நவநீதன்: தொல்லியல் திணைக்களத்தின்

தொடர்ச்சி →

தொடர்ச்சி →

ஒரு பிரதிநிதி போலவே இந்த பிக்கு முதலில் செம்மலைக்கு வந்திருந்தார். அவரது செயற்பாடுகளுக்கு வவுனியா தொல்லியல் திணைக்களம் முதலில் அனுமதி வழங்கியது. அவர்களின் அனுமதியுடனேயே கட்டுமாணப் பணிகளை தான் ஆரம்பித்ததாகவும் அவர் முதலில் சொல்லியிருந்தார். தொல்லியல் திணைக்களம் கொடுத்த கடிதம் ஒன்றைத் தவிர அவரிடம் இப்போது வேறு எந்த ஆவணமும் அவரிடம் இல்லை.

**கேள்வி: வடக்கு கிழக்கில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக எத்தனை இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள? அவை எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றன?**

பதில்: வடக்கில் 337 இடங்கள் தொல்லியல் முக்கியத்துவம் மிக்க பகுதிகளாக தொல்லியல் திணைக்களத்தினால், அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில் முல்லைத்தீவில் 167 இடங்கள் உள்ளன. அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான




இடங்களில் செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. தொல்லியல் திணைக்களம் எழுந்தமானமாகவே அவற்றைத் தெரிவு செய்கின்றது. அதற்காக முறைப்படி ஆய்வுகள் செய்யப்படுவதில்லை. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாகவே இவை உள்ளன. மணலாறு. கரைத்துறைப் பற்று பகுதிகளில் மட்டும் 47 இடங்கள் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு இணைப்பை கேள்விக்குள்ளாக்குவதும், தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதும்தான் இதன் நோக்கம். அடையாளம் காணப்படும் பகுதிகளில் புத்த விகாரைகளை உடனடியாகக் கட்டுவதும், சிங்கள குடியிருப்புகளை உருவாக்குவதும்தான் அவர்களுடைய திட்டம்.

நீராவியடிப் பகுதியில் கூட, புத்த விகாரைகளைக் கட்டுவது மட்டும் அவர்களுடைய திட்டமாக இருக்கவில்லை. அதனையடுத்துள்ள கடற்பகுதியில் மீனவர் குடியிருப்பு. மற்றப் பகுதியில் விவசாயக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தி, சிங்களவர்களைக் கொண்டுவருவதுதான் அவர்களின் திட்டம். இங்கு சுமார் 1,000 ஏக்கரில் காணியைப் பெற்று பௌத்த மயமாக்கல் திட்டம் ஒன்று அவர்களிடம் இருந்துள்ளது. இது வெறுமனே குறிப்பிட்ட பிக்குவின் திட்டம் அல்ல. அதன் பின்னணியில் பௌத்த மயமாக்கல் கொள்கை வகுப்பாளர்கள் உள்ளனர்.

**கேள்வி: இந்த பௌத்த மயமாக்கல் திட்டத்தில் இராணுவப் பங்களிப்பு எப்படியுள்ளது?**

பதில்: நீராவியடி பிள்ளையார் கோவில் பகுதியில் இராணுவ முகாம் இருந்தது. பின்னர் அவர்கள் வெளியேறினாலும், பிள்ளையார் கோவில் இருந்த பகுதியில் புத்தர் சிலையை அமைப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியது அவர்கள்தான். இராணுவம் வெளியேறும்போது அந்தப் பகுதி பிக்குவிடம் கொடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் இராணுவக் காப்பரண் அமைக்கப்பட்டு புத்தர் சிலையைப் பாதுகாக்கின்றார்கள். வடக்கில் இந்தளவுக்கு பெருமளவில் பாரிய இராணுவ முகாம்கள் இருப்பதன் மற்றொரு நோக்கம் இவ்வாறான குடியேற்றங்களைப் பாதுகாப்பதும், அதற்கு அனுசரணை வழங்குவதும்தான்.

## போதைப் பொருளை பையுடன் விழுங்கியவர் சாவு!

போதைப்பொருள் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் போதைப்பொருளை விழுங்கி மரணமடைந்துள்ளார்.

குறித்த சந்தேகி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் திடீரென்று ஐஸ் ரக போதைப்பொருளை பையுடன் சேர்த்து விழுங்கியுள்ளார்.

பின்னர் தான், ஐஸ் போதைப்பொருள் பக்கற் ஒன்றை விழுங்கிவிட்டதாக திடீரென்று காவல் துறையினரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவரை காவல் துறை அனுமதித்தபோதும் பின்னர் அவர் உயிரிழந்ததாக காவல் துறை பேச்சாளர் கூறியுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 38 வயதானவர் என காவல் துறை பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## பௌத்தம மயமாக்கலை தீவிரப்படுத்த 10000 பிக்குகளை திரட்டும் ஞானசார தேரர்



யூலை 7 திகதி கண்டிக்கு 10000 தேரர்களை வரவழைக்க எதிர்ப்பர்த்துள்ளோம் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

சமய நிகழ்வொன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில், புனிதமான 4 மாதங்கள் கழிந்ததும் இறை நிராகரிப்பாளர்கள், சிலை வணக்கத்தில் ஈடுபடுபவர்களை கண்ட இடத்தில் வெட்டிக்கொலை செய்யும் படி அல் குர்ஆனின் 9;5 அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் இல்லாவிட்டாலும் தீவிரவாதிகள் என கைது செய்யப்படும் அனைவரும் முஸ்லிம்கள். அடிப்படை வாதத்தை தோற்கடிக்க கூடிய பொறுப்பு பௌத்த தேரர்களுக்கே உள்ளது.

ஏன் என்றால் அவற்றுக்கு மத கோட்பாடுகளுக்கு அமையவே பதில் அளிக்க வேண்டுமே தவிர அரசியல் தீர்வுகளினால் அல்ல. நாம் தற்போது ஊர் ஊராக சென்று குர்ஆனில் பன கூற தயாராவோம்.

நாம் குர் ஆன் ஹதீஸ் சுன்னா போன்றவற்றை படித்து தேர்ந்தால் பாரம்பரிய முஸ்லிம்களையும் பாதுகாத்துக்கொண்டு இந்த அடிபடை வாத நச்சு பாம்பை ஒழித்து கட்டி உலகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டு ஆக முடியும். யூலை 7 திகதி கண்டிக்கு 10000 தேரர்களை வரவழைக்க எதிர்பார்த்துள்ளோம். பௌத்த தேரர்கள் ஒன்றுபட்டால் எமது தலைவர்களை ஒன்றுபடுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

# கிழக்கில் தமிழர்களின் காணிகளை பெயர் மாற்றி முஸ்லிம் குடியேற்றங்களை ஹிஸ்புல்லாஹ் ஸ்தாபித்துள்ளார்

## அத்துரலிய ரத்ன தேரர் குற்றச்சாட்டு

கிழக்கில் அதிகளவான தமிழர்களின் காணிகளைப் பெயர்மாற்றம் செய்து முஸ்லிம் குடியேற்றங்களை முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஸ்தாபித்துள்ளார் என யாழ். மண்ணில் வைத்து அத்துரலிய ரத்ன தேரர் குற்றம் சுமத்தினார்.

மேலும் ஆசிரியர் நியமனத்திலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு அதிகளவு முஸ்லிம்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் யாழ். நீராவியடி பகுதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்ற சிங்கள அடிப்படைக் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த தமிழ் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை நாட்டின் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நிலையில் ஒரு சில அடிப்படைவாதக் குழுக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளின் உதவியுடன் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும் அரபு தேசத்தை இலங்கையில் நிறுவுவதற்கும் கனவு காண்கிறார்கள். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஹிஸ்புல்லாஹ் அடிப்படை மதவாதக் கொள்கையை விரிவுபடுத்தும் வகையிலும் மதத் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் சாஹிராப் பல்கலைக்கழகத்தை நிறுவியமையை அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாது அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் இருக்கும் அமைச்சர்களும் முஸ்லிம் அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதற்கு நிதி உதவிகளை வழங்கி வந்தமையை அறியக் கூடியதாக உள்ளது.

முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் கிழக்கில் அதிகளவான தமிழர் காணிகளைப் பெயர்மாற்றம் செய்து முஸ்லிம் குடியேற்றங்களை ஸ்தாபித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் கிழக்கில் ஆசிரிய நியமனத்திலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு அதிகளவில் முஸ்லிம் ஆசிரியர்களே சேவையில் உள்வாங்கப்பட்டனர்.

நாட்டின் முன்னைய காலங்களில் ஏற்றுமதி இறக்குமதித்துறைகளில் ஈடுபட்ட தமிழ், சிங்கள வர்த்தகர்கள் புறந்தள்ளப்பட்டு முஸ்லிம் வர்த்தகச் சாம்ராஜ்யமாக மாற்றப் பட்டுள்ளது என்றார்.

# உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல்கள், இந்தியத் தேர்தல் முடிவுகள் என்பவற்றின் பின்னரான தமிழ் அரசியல்

நிலாந்தன்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஓர் அரசசார்பற்ற நிறுவனத்தின் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமாகிய ஒருவர் யாழ் மாவட்டகட்டளைத் தளபதியிடம் பின்வருமாறு கூறியிருக்கிறார் “ஒருகாலம் எந்தபடைத் தரப்பிடமிருந்து பெண்களைபாதுகாக்க வேண்டும் என்று கோரினோமோ அதேபடைத்தரப்பு இப்பொழுது பெண்கள் பயிலும் பாடசாலைகளின் வாயிலில் காவலுக்குநிற்கிறது” என்று. அதற்கு கட்டளைத்தளபதி சொன்னாராம் அவர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் நாங்கள் அங்கே நிற்கிறோம் என்று.



யாழ். சர்வமதசங்கத்தைச் சேர்ந்த ஓர் இந்துமததலைவருக்கும் மேற்சொன்ன தளபதி அவ்வாறு தான் கூறியிருக்கிறார். தமிழர்களை பாதுகாப்பதற்காகத்தான் சோதனைச் சாவடிகளும் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக.

அதே தளபதியிடம் கடந்தகிழமை பாதுகாப்பு கெடுபிடிகள் தொடர்பாக அமைச்சர் மனோகணேசன் கதைத்திருக்கிறார். அதன்போது வடக்குகிழக்கில் சோதனை நடவடிக்கைகள் அதிகமாக காணப்படுவது பற்றிய முறைப்பாடுகளை அவரிடம் தெரிவித்திருக்கிறார். அதற்கு பதில் கூறிய மேற்படி தளபதி தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகத்தான் நாங்கள் அவ்வாறு செய்கின்றோம் என்று கூறியிருக்கிறார். அமைச்சர் மனோகணேசன் கேட்டுக்கொண்டதையடுத்து ஊடகக் கவனிப்புடைய ஏ9 சாலை போன்றவற்றில் சோதனை நடவடிக்கைகள் குறைந்துள்ளன. ஆனால் ஊடகக் கவனிப்புக் குறைந்த உள்வீதிகளில் உதாரணமாக கிளிநொச்சியின் உள்வீதியான பன்னங்கண்டி வீதியில் சோதனைச்சாவடியில் பயணிகள் வாகனங்களைப்பதிய வேண்டும். அப்படித்தான் காரைநகரின் வாசலில் பொன்னாலைச் சந்தியில் சோதனைகள் உண்டு. வாகனப் பதிவும் உண்டு. வடக்குகிழக்கில் பாடசாலைகளின் முன் இரண்டுபடையாட்கள் காவலுக்கு நிற்கிறார்கள். பாடசாலைகள் தொடங்கும் முடியும் நேரங்களில் அவர்கள் காவலுக்கு நிற்கிறார்கள். அவர்கள் மிகவும் ரிலாக்சாக நிற்கிறார்கள். பாடசாலைப் பிள்ளைகளை தாங்களே பாதுகாப்பதான ஒருதோரணை அவர்களுடைய முகபாவனைகளிலும் உடல் மொழியிலும் காணக் கிடைக்கிறது. அவ்வாறு பாதுகாக்கும் கடமையின்போது அவர்கள் எதிர்த் தரப்பிடம் இருந்துவரக்கூடிய ஆபத்துக்களை குறித்த அச்சமும் திகிலுமின்றி மிகவும் சாவகாசமாக ஒருவித கதாநாயகத் தனத்தோடு பள்ளிக்கூடங்கள் பொது இடங்களின் வாசல்களிலும் கோவில் வாசல்களிலும் திருவிழாக்களின் போதும் காணப்படுகிறார்கள்.

அவர்கள் அவ்வாறு ரிலாக்ஸ் ஆக இருப்பதற்கு ஓர் அடிப்படைக் காரணம் உண்டு. இது ஈழப் போர்க்களம் அல்ல. இந்த யுத்தம் ஆயுதமேந்திய படைகளைக் குறிவைக்கவில்லை. மாறாக ஆயுதம் ஏந்தியிராத அப்பாவிகளைத்தான் இலக்கு வைத்திருக்கிறது. நாங்களும் இந்த யுத்தத்தின் ஒருபகுதி என்பதைக் குறித்த எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் இன்றி வழமைபோல தேவாலயங்களில் வழிபடச் சென்ற அப்பாவிகளான பக்தர்களைத்தான் ஜிகாத் அமைப்பு வேட்டையாடியிருக்கிறது. எனவே இந்த யுத்தத்தில் படைத்தரப்பு ஓர் இலக்கு அல்ல என்பது படைத் தரப்பை பெருமளவிற்கு ரிலாக்சாக வைத்திருக்கிறது. அதோடு கடந்த பத்தாண்டுகளாக அவர்களுக்கு பெரிய அளவுவேலைகள் இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது வேலைகிடைத்திருக்கிறது. அதுவும் காவல் காக்கும் வேலை. எனவே ஒருவித ரிலாக்ஸான மனோநிலையோடு கதாநாயகத்தனமாக அவர்கள் பாடசாலைகளின் முன்னே நிற்கிறார்கள். வெயில் அதிகமாக இருக்கும் நாட்களில் கூலிங் கிளாஸ்களையும் அணிந்தபடிநிற்கிறார்கள்.

கடந்த பல ஆண்டுகளாக உலக சமூகத்தின் முன் எந்த ஒரு படைத்தரப்பை தமிழ் மக்கள் போர்க் குற்றவாளிகளாக காட்டிவருகிறார்களோ எந்த ஒருபடைத்தரப்பு இனப்படுகொலை புரிந்ததாக தமிழ் மக்கள் உலக சமூகத்திடம் குற்றம் சாட்டிவருகிறார்களோ அதேபடைத்தரப்பு இப்பொழுது தமிழ் பள்ளிக்கூட பிள்ளைகளையும் பக்தர்களையும் பாதுகாக்கும் ஒரு பொறுப்பை ஏற்றிருப்பது என்பது ஒருதலைகீழ் மாற்றம்.

ஒருபுறம் ஐ.நாவில் தமிழ் தரப்பு போர்க்குற்ற விசாரணைகளுக்கு எதிராக நீதி கேட்கிறது. இன்னொருபுறம் எந்த ஒரு படைத்தரப்புக்கு எதிராக ஐ.நாவில் தமிழ்த் தரப்பு குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றதோ அதே அதே படைத்தரப்பு தமிழ் தரப்பின் பள்ளிக்கூடங்களையும் ஆலயங்களையும் பாதுகாக்கப்போவதாகவும் கூறப்படுகிறது. இந்த முரண் வளர்ச்சியானது ஜிகாத் தாக்குதல்களின் நேரடி விளைவாகும். இது அனைத்துலக அளவில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்த கூடியது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் தமிழ் அரசியலானது இந்த ஒரு விடயத்தில் மட்டும் தான் பலவீனப்பட்டுள்ளது என்பது அல்ல. இதைவிட வேறுபல இடங்களிலும் அது பலவீனமடைந்துள்ளது.

முதலாவதாக கூட்டமைப்பின் யாப்பு உருவாக்க முயற்சிகள் முழுவதுமாக கைவிடப்பட்டுவிட்டன. யாப்பு முயற்சிகளைக் காட்டித்தான் சம்பந்தர் தனது வாக்காளர்களின் நம்பிக்கைகளை கட்டியெழுப்பி வந்தார். ஆனால் இப்பொழுது யாப்பு முயற்சிகள் பின் தள்ளப்பட்டுவிட்டன.

இரண்டாவதாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள் முடக்கப்பட்டிருக்கிறார்கள். அரசியல் செயல்பாட்டாளர்களும் முடக்கப்பட்டிருக் கிறார்கள். யாரை முடக்க வேண்டுமோ அவர்களின் மீதுபயங்கரவாதத் தடைச் சட்டத்தை பிரயோகிக்கலாம் என்ற நிலைமை தோன்றியிருக்கிறது.

மூன்றாவது - ராஜபக்சஅணி வெல்லக் கூடியவாய்ப்புகள் மேலும் அதிகரித்துள்ளன. ஜிகாத் தாக்குதல்களின் விளைவாக சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் மறுபடியும் மேலோங்கத் தொடங்கியுள்ளது. இது இனவாத அலையொன்றைத் தோற்றுவிப்பதற்கு தேவையான தளத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

ஜிகாத் தாக்குதல்களுக்கு முன்பு மஹிந்த அணி யாப்புருவாக்க முயற்சிகளை முன் வைத்து ஒரு இனவாத அலையைத் தோற்றுவிக்கக்கூடிய நிலைமைகளே காணப்பட்டன. ஆனால் இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு சிங்களப் பொது உளவியலை தூண்டிவிடுவதன் மூலம் இனவாத அலையை பெரிதாக்கலாம். இதனால் முஸ்லிம் வாக்குகளை சில வேளைகளில் ராஜபக்சே இழக்க நேரிடலாம். எனினும் தனிச்சிங்கள வாக்குகளால் அரசுத்தலைவர் ஆகும் திட்டம் எதுவும் அவர்களிடம் இருந்தால் அவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை சாட்டாக வைத்து இனவாத அலையை ஆகக் கூடியமட்டும் தூண்டக்கூடும்.

நாலாவது - உள்நாட்டு யுத்தத்தின் விளைவுகளை முன்வைத்து தமிழ்த் தரப்பு உலக அரங்கில் கடந்த 10 ஆண்டுகளாக அரசியல் செய்து வந்தது. ஆனால் இப்பொழுது ஓர் அனைத்துலக யுத்தகளத்திற்குள் நாடு இழுத்துத்து வரப்பட்டுவிட்டது. இதனால் அனைத்துலக சமூகத்தின் கவனம் ஜிகாத் அமைப்புக்கு எதிராகக் குவிக்கப்பட்டுவிட்டது. இதனால் தமிழ் மக்கள் முன் வைத்த போர்க்குற்ற விசாரணை, இனப்படுகொலைக்கு எதிரான நீதி போன்ற விடயங்கள் பின் தள்ளப்பட்டுவிட்டன. அதுமட்டுமல்ல உலக சமூகம் இப்பொழுது ஜிகாத்தை எப்படி தோற்கடிக்கலாம் என்பதிற்தான் தனது கவனம் முழுவதையும் குவித்து வருகிறது. இதனால் அவசரகாலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படக்கூடிய கொடுமைகளின் மீது உலகத்தின் கவனம் அதிகம் ஈர்க்கப்படாது.

ஆனால் இந்த இடையூட்டுக்குள் அரசாங்கமும் அதன் உபகரணங்களான திணைக்களங்களும் மகாசங்கத்தவர்களும் யுத்தத்தை வேறு வழிகளில் தொடர்கிறார்கள். முல்லைத்தீவில் ஒரு பிள்ளையார் கோயிலுக்கு அருகே பௌத்த கோவில் கட்டப்படுகிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி பிக்குகள் தமிழ் மக்களை அச்சுறுத்தி வருகிறார்கள். திருகோணமலையில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் அமைந்திருந்த பிள்ளையார் ஆலயம்

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# தளரும் மைத்திரியின் பிடி பலமடைகிறாரா ரணில்?

**சத்தியன்**

"ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைகளை முன்னெடுக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தாவிட்டால், அமைச்சரவையைக் கூட்டப் போவதில்லை" என அறிவித்து, அந்த விடயத்தில் உறுதியாக இருந்து கடந்த வாரம் அமைச்சரவையையும் கூட்டாத சனாதிபதி மைத்திரி, இப்போது தன்னுடைய இறுக்கமான நிலைப்பாட்டைத் தளர்த்தியிருக்கின்றார்.

வரும் செவ்வாய்க்கிழமை 18 ஆம் திகதி அமைச்சரவை வழமைபோல கூடும் என அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மைத்திரி இப்படி தடாலடியாக சரணடைந்தமைக்கு என்ன காரணம் என ஆராயப்புகுந்த போது சுவாரசியமான பல தகவல்கள் கிடைத்தன.

அதிரடியாக முடிவுகளை எடுப்பதும், செயற்படுத்துவதும் சனாதிபதி மைத்திரியின் வழமை. அது சாத்தியமா? அரசியலமைப்பில் அதற்கு இடமிருக்கின்றதா? என்பதையிட்டு பின்னர்தான் அவர் பார்க்கின்றார். அல்லது பின்னர் யாராவது எச்சரிக்கும் போது விழித்தெழுந்து தடுமாறுகின்றார்.

கடந்த வாரத்தில் அதிரடியாக இரண்டு செயற்பாடுகளை மைத்திரி மேற்கொண்டார். அதில் முதலாவதுதான் அமைச்சரவையைக் கூட்டாமல் விட்டது. இரண்டாவது, இராஜினாமாச் செய்த முஸ்லிம் அமைச்சர்களின் இடத்துக்கு பிரதமர் ரணிலின் ஆலோசனையோ பரிந்துரையோ இன்றி தம்பாட்டில் பதில் அமைச்சர்களை நியமித்தமை.

பதில் அமைச்சர்களை நியமித்தமை அரசமைப்பை மீறிய தவறான நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டி சனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினார் ரணில். இந்த விடயத்தை ஒட்டிப் பிரதமர் உயர் நீதிமன்றுக்குப் போகலாம் என்ற பேச்சு எழுந்ததும், பிரதமரைச் சமாளிக்கும் விதத்தில், நிறுத்தப்பட்ட அமைச்சரவையைக் கூட்டுவதாக மைத்திரி அறிவித்திருக்கின்றார். ஆனால், அதற்கு மற்றொரு காரணமும் இருக்கின்றது. மூன்று முஸ்லிம் அமைச்சர்கள் இராஜினாமாச் செய்தமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ராஜித சேனாரத்ன, மலிக் சமரவிக்கிரம, ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோரின் பெயர்களை ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்திருந்தார். ஆனால் அதை கணக்கில் எடுக்காமல், சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்குப் பொறுப்பான பிரதி மற்றும் இராசாங்க அமைச்சர்களை அந்தந்த அமைச்சுகளுக்கான பதில் அமைச்சர்களாக நியமித்திருக்கின்றார் சனாதிபதி. இந்த நடவடிக்கை அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கு முற்றிலும் மாறான செயற்பாடு என்பதைத் தெளிவுபடுத்தி சனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றார் ரணில். அரசமைப்பின் 19 ஆவது திருத்தப்படி பிரதமரின் பரிந்துரையின் பேரில்தான் அமைச்சர்களை சனாதிபதி நியமிக்க முடியும். இது முதலாவது விடயம்.



இதனைவிட மற்றும் ஒரு விடயத்தையும் ரணிலால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ஒரு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இராஜினாமாச் செய்து, அந்த அமைச்சு வெற்றிடமாக இருக்கும் போது, அந்த இடத்துக்கு ஒரு பதில் அமைச்சரை நியமிக்க முடியாது. அமைச்சர் ஒருவர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருந்தால், அல்லது கடமையைச் செய்ய முடியாமல் இருந்தால் மட்டுமே அவரின் இடத்துக்கு ஒரு பதில் அமைச்சர் நியமிக்கப்படலாம். அதற்கு மாறாக, ஓர் அமைச்சுக்கு அமைச்சரே நியமிக்கப்படாமல் இருக்கும் நிலையில் அந்த இடத்துக்கு ஒரு பதில் அமைச்சர் நியமிக்கப்பட முடியாது.

ஆக, அரசியலமைப்பைத் தொடர்சியாக மீறிவரும் சனாதிபதி, இப்போது பதில் அமைச்சர்களை நியமிப்பதிலும் அரசியலமைப்பின் இரண்டு விடயங்களை மீறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த விடயங்களையும் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் ரணில். சனாதிபதியின் இத்தகைய அரசமைப்பு மீறல் நடவடிக்கைக்கு உயர் நீதிமன்றம் மூலமே நிவாரணம் கோரிப் பெற வேண்டியநிலையில் உள்ளார் ரணில். பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் கடந்த வாரம் கூட்டப்படவில்லை. இதற்கு ரணில் உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

அடுத்த வாரமும் அமைச்சரவை கூட்டப்படாவிட்டால் பாராளுமன்றத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி விசேட பிரேரணையொன்றை முன்வைத்துவிட்டு தனக்கிருக்கும் அதிகாரங்களுடன் தற்றுணிவாக அமைச்சரவையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருகின்றார் எனத் தகவல்களும் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் தனக்கு நெருக்கமானவர்களுடன் ரணில் ஆராய்ந்திருந்தார்.

இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால், சனாதிபதியாக இருந்தாலும் மைத்திரி தனிமைப்படுத்தப்படும் நிலை ஏற்படும். இது குறித்து மைத்திரியின் ஆலோசகர்கள் அவருக்கு அவசர ஆலோசனை வழங்கியிருக்கின்றார்கள். அமைச்சரவையைக் கூட்டாவிட்டால் உங்களுக்குத்தான் ஆபத்து என அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனையடுத்தே அமைச்சரவைக் கூட்டம் 18 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்குமாறு தனது செயலாளருக்கு உத்தரவிட்டுவிட்டு தஜிகிஸ்தானுக்கு பறந்தார் மைத்திரி.

இந்தப் பின்னணியில்தான் எதிர்வரும் 18 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது என அமைச்சரவையில் உள்ள சகல அமைச்சர்களுக்கும் சனாதிபதி செயலகத் தரப்பால் வியாழக்கிழமையே அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட இரண்டு பிரச்சினைகளில் ஒன்றுக்கு இவ்வாறு தீர்வு காணப்பட்டுவிட்டது.

அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் என்ன நடைபெறுகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். செவ்வாய்கிழமை நடைபெறப்போகும் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திலும், பாராளுமன்ற கூட்டத் தொடரிலும் இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

---

தொடர்ச்சி → **உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல்கள்**

அகற்றப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவுக்கு கடந்தவாரம் வருகை தந்த அரசுத்தலைவர் அங்கே ஒரு தமிழ் குளத்தின் பெயரை சிங்களத்தில் மாற்றி எழுதி அதில் மீன் குஞ்சுகளை விட்டிருக்கிறார். அதாவது உலகத்தின் கவனம் ஜிகாத்தை எப்படி முறியடிப்பது என்பதில் குவிக்கப்பட்டிருக்கும் ஒருகால கட்டத்தில் அரசாங்கமும் அதன் உபகரணங்களும் தமிழ் மக்கள் மீது யுத்தத்தை வேறு வழிகளில் தொடர்ந்து வருகின்றன.

ஐந்தாவது - புதிய யாப்பொன்றைக் கொண்டுவரப்போவதாக வாக்களித்த கூட்டமைப்பு இப்பொழுது வீதிகளை திருத்துவதிலும் கட்டடங்களைக் கட்டி எழுப்புவதிலும் தனது கவனத்தைக் குவித்து வருகிறது. கம்பெரலிய திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் அபிவிருத்தி அரசியலில் ஒரு பங்காளியாகியதன் மூலம் தமிழ் மக்களின் உரிமை அரசியலை பின்தள்ளும் ஒரு வேலைக்குக் கூட்டமைப்பு உடந்தையாக காணப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான மேற்கண்ட விளைவுகளை தொகுத்துப் பார்த்தால் ஒருவிடயம் தெளிவாகத் தெரிகிறது.அத்தாக்குதல்கள் தமிழ் மக்களின் அரசியலை பலவீனப்படுத்தி இருக்கின்றன. அனைத்துலக அளவிலும் உள்நாட்டிலும் தமிழ் மக்களின் உரிமையை அரசியலுக்கு ஒப்பீட்டளவில் பாதகமான ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஒரு பின்னணியில் புதிய நிலைமைகளை எதிர்கொள்ள புதிய உபாயங்களுடன் களமிறங்கும் புதிய தலைமைகள் தமிழ் மக்களுக்கு தேவை.

இந்தியாவில் மறுபடியும் நரேந்திரமோடி தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். பதவியேற்றதும் அவர் முதலாவதாக மாலைதீவுக்கும் இரண்டாவதாக இலங்கைக்கும் வருகை தந்திருக்கிறார். மாலைதீவின் முன்னைய அரசாங்கம் சீனாவுக்கு நெருக்கமாயிருந்தது. அது சீனாவுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்திருந்தது. அந்த உடன்படிக்கையானது மாலைதீவை சீனாவின் கடல் வழிப் பட்டுப் பாதைத் திட்டத்துக்குத் திறந்துவிடுவதாக அமைந்தது. அது சீனாவின் பெல்ட் அண்ட் றோட் திட்டத்தில் மாலைதீவையும் பங்காளியாக்கியது. இச்சீனச் சார்பு அரசாங்கம் கடந்த செப்டெம்பர் மாதம் தோற்கடிக்கப்பட்டு இப்போதுள்ள புதிய அரசாங்கம் பதவியேற்றது. இவ்வரசாங்கம் சீனாவை விடவும் இந்தியாவை நெருங்கி வருகிறது. நரேந்திரமோடி, மாலை தீவின் புதிய அரசுத்தலைவருடன் பாதுகாப்பு, வர்த்தகம் உட்பட ஆறு உடன்படிக்கைகளைச் செய்துள்ளார். குறிப்பாக மாலைதீவுக் கடலில் சீனாவின் நடமாட்டங்களைக் கண்காணிக்கும் இந்திய ராடர்களைப் பொருத்தும் ஓர் உடன்படிக்கையும் இவற்றுள் அடங்கும். மோடியின் மாலைதீவு விஜயத்தின் பின் மாலைதீவுகளின் அரசுத்தலைவர் இலங்கைக்கு அடுத்தவார இறுதியில் வருகிறார். ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று அவர் வருகிறார். எனவே இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தல் ஒரு தெளிவான சித்திரம் கிடைக்கும். அச்சித்திரத்தை விளங்கி ஈழத்து தமிழ் அரசியலைத் திட்டமிடவல்ல தலைவர்கள் தேவை. அதேசமயம் தமிழகத்தில் நரேந்திரமோடியின் கட்சி தோல்வி கண்டிருக்கிறது. தமிழகம் மீண்டும் ஒரு தடவை தனது தனித்துவத்தை வெளிக்காட்டியிருக்கிறது. புதியமுதல்வர் ஸ்டாலினை எப்படி அணுகுவது? ஈழத்தமிழர்களுக்கு அதிகம் நெருக்கமாகக் காணப்படும் வைகோவின் கை ஒப்பீட்டளவில் ஓங்கியிருக்கிறது. தொல்.திருமாவளவன், கனிமொழி போன்றவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் எப்படிக் கையாள்வது?

அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னரான உலக சூழலையும் உள்நாட்டுச் சூழலையும் இந்திய பொதுத் தேர்தலின் பின்னரான பிராந்தியச் சூழலையும் குறிப்பாக தமிழகச் சூழலையும் ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து எப்படிக் கையாள்வது என்பது குறித்து புதிய தரிசனத்தையும் புதிய வியூகத்தையும் கொண்ட ஒரு புதிய தமிழ்த் தலைமை தேவை. இப்பொழுது அரங்கில் காணப்படும் தமிழ் தலைமைகளுள் யார் அப்படிப்பட்ட ஒருதலைமையாக மேலெழுப்போகிறார் ?

# யேர்மன் பல்லின கலாச்சார விழாவில் புலிக்கொடியுடன் ஈழத்தமிழர்கள் பங்கேற்பு






தமிழின அடையாளத்தை பாரெங்கும் பரவச் செய்வோம். யேர்மன் தலைநகர் பேர்லினில் நடைபெற்ற உலகப்புகழ் கொண்ட பல்லின கலாச்சார பெருவிழாவில் ஈழத்தமிழர்களும் கலந்துகொண்டு தமது அடையாளத்தையும், பாரம்பரிய கலையையும் வெளிப்படுத்தி தமக்கான தனித்தன்மையை, தமக்கான அடையாளத்தை நிலைநிறுத்தும் வகையில் பவனி வந்தனர். ஒரு மில்லியன் பார்வையாளர்களின் மத்தியில் ஈழத்தமிழர்கள் பொய்க்கால்குதிரை ஆட்டம், மயிலாட்டம், பாவைக் கூத்து, காவடி, சிலம்பாட்டம், மாடு ஆட்டம், பறை இசைத்தல் என தமது பாரம்பரிய கலைகளை அரங்கேற்றினர். பழமை வாய்ந்த தமிழர் பாரம்பரிய கலைகளை பல்லின மக்கள் ஆர்வமாக பார்வையிட்டதோடு மட்டும் அல்லாமல் தம்மையும் இணைத்துக்கொண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

ஈழத்தமிழர்களின் நிகழ்ச்சி பேர்லின் தொலைக்காட்சியிலும் சிறிய தொகுப்பாக ஒளிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. யேர்மன்நாட்டு தொலைகாட்சியில் கம்பீரமான தோற்றத்துடன் தமிழீழ தேசியக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது.







# உலகப்போரில் அமெரிக்கா போட்ட வெடிகுண்டு மக்களை வெளியேற்றி செயலிழக்க வைப்பு

இரண்டாம் உலகப்போர் 1939-1945 ஆண்டுகளில் நடைபெற்றது. அப்போது ஜெர்மனியின் பெர்லின் நகரில் அமெரிக்கா போட்ட 100 கிலோ எடை கொண்ட ராட்சத வெடிகுண்டு வெடிக்காத நிலையில் அலெக்சாண்டர்பிளாட்ஸ் சதுக்கத்தில் கண்டெடுக்கப்பட்டது. அலெக்சாண்டர்பிளாட்ஸ் சதுக்கத்தில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வெடிகுண்டை செயலிழக்க வைக்க போலீசார் நேற்று அதிகாலை நேரத்தில் நடவடிக்கை எடுத்தனர்.

இதற்காக அந்தப் பகுதியில் வசித்து வந்த சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த வெடிகுண்டை வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் பாதுகாப்பு முன்னெச்சரிக்கையுடன் செயலிழக்க வைத்தனர். அதிகாலை 1.45 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை, எந்த பாதிப்பும் இன்றி வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.



## ‘டிக்டாக்’ செயலியை கண்காணிக்க 500 பேர் கொண்ட குழு



சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் இயங்கிவரும் ‘பைட் டான்ஸ்’என்ற தொழில்நுட்ப நிறுவனமே தற்போது இளைஞர்களின் கைகளில் புரளும், டிக்டாக், ஹலோ, விகோ லைட் போன்ற செயலிகளை அளித்து வருகிறது.

இளைஞர்கள் மட்டுமின்றி பெரியவர்களும் ‘டிக்டாக்’ செயலியில் காணொளிகளை வாயசைவு மூலம் பாடலுக்கு ஏற்ப நடித்து, நடனமாடி இவற்றில் பகிர்ந்து வருகின்றனர். இன்னும் சிலர் அதிக விருப்புகள், பகிர்வுகள் பெற வேண்டும் என்பதற்காகவும், பயனர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகவும் விபரீத செயல்களில் ஈடுபட்டு உயிரையும் மாய்த்து கொள்வதும் உண்டு.

தமிழ் மட்டுமின்றி ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், ஒடியா, இந்தி, மராத்தி உள்ளிட்ட 11 இந்திய மொழிகளிலும், சர்வதேச அளவில் 150 மொழிகளிலும் ‘டிக்டாக்’ இயங்குகிறது.

இப்படி மிகக்குறுகிய காலத்தில் இளைஞர்களிடம் நல்ல வரவேற்பை பெற்ற ‘டிக்டாக்’ மீது அடுக்கடுக்கான புகார்களும், கண்டனங்களும் எழுந்தன. பல எதிர்ப்புகளை மீறி, இளைஞர்களின் அமோக ஆதரவால் 120 கோடி பயனர்களை தன்னுள் வைத்து இளைய தலைமுறையினரை ஆட்டி வைத்து வருகிறது இந்தச் செயலி.

‘டிக்டாக்’கில் பதிவிடப்படும் வீடியோக்கள் கலாசார சீர்கேட்டை ஏற்படுத்துவதாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து இந்நிறுவனம் 13 வயதுக்கு உட்பட்டவர்கள் காணொளிகளை பதிவிட தடை விதித்தது. மேலும் பயனர்களுக்கான நேரக் கட்டுப்பாட்டையும் ‘டிக்டாக்’ கொண்டுவந்தது.

உலக அளவில் 50 அலுவலகங்களைக் கொண்டு செயல்படும் ‘டிக்டாக்’, இந்நிலையில் ‘டிக்டாக்’ செயலியை பயன்படுத்துவோரை கண்காணிக்கவும், பதிவிடும் காணொளிகளுக்கு அனுமதி வழங்கவும் 500 பேர் கொண்ட பணியாளர்கள் குழு 24 மணி நேரமும் பணியாற்றுவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதையடுத்து டிக்டாக் பயனர்களுக்கு கடவுச்சொல் அளிக்கவும், தற்கொலை எண்ணத்துடன் காணொளிகளை பதிவிடுபவர்களுக்கு உளவள ஆலோசனை அளிக்கவும் ‘டிக்டாக்’ நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## நியூசிலாந்தில் 7.4 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

நியூசிலாந்து நாட்டில் 7.4 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. முதலில் விடப்பட்ட சுனாமி எச்சரிக்கையை வாபஸ் பெற்றது அந்நாட்டு அரசு. நியூசிலாந்து நாட்டில் இன்று காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கம் மக்கள் அதிகம் வசிக்காத கெர்மடெக் தீவு பகுதிகளில் இருந்து வடக்கே ஏற்பட்டுள்ளது.

கடலோர பகுதிகளில் கடும் பாதிப்பு ஏற்படுத்தும் அளவில் சுனாமி அலைகள் இருக்கும் என முதலில் எச்சரிக்கை விடப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன்பின், சுனாமி எச்சரிக்கையை நியூசிலாந்து அரசு வாபஸ் பெற்றது.



## போரை விரும்பவில்லை. ஆனால், அபாயங்களை எதிர்கொள்ள அஞ்ச மாட்டோம் சவுதி அரேபியாவின் இளவரசர்

ஓமன் வளைகுடாவில் அண்மையில் எண்ணெய் கொள்கலன்கள் தாக்கப்பட்டதற்கு ஈரானை குற்றஞ்சாட்டி உள்ளது சவுதி அரேபியா. சவுதி அரேபியாவின் முடி இளவரசர் முகமது பின் சல்மான், "நாங்கள் போரை விரும்பவில்லை. ஆனால் எங்கள் மக்களுக்கு, இறையாண்மைக்கு, நலனுக்கு, பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ள எந்த விடயத்தையும் எதிர்கொள்ள தயங்கமாட்டோம்," என்று அரேபியா முழுவதும் வெளிவரும் நாளிதழான அஷார்க் அல்- அவ்ஸாத்திடம் கூறி உள்ளார். முன்னதாக, ஓமன் வளைகுடாவில் எண்ணை கொள்கலன்கள் மீது தாங்கள் தாக்குதல் நடத்தவில்லை என ஈரான் கூறியிருந்ததை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிராகரித்து இருந்தார்.



## குட்டி விமானம் மூலம் உணவு விநியோகம்



உணவு விநியோக சேவையில் ஈடுபட்டுள்ள உபர் நிறுவனம் தங்களது வழக்கமான பணிகளுக்கு ட்ரோன் (DRONE) எனப்படும் குட்டி விமானங்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

கோட்டலுக்கு சென்று உணவு சாப்பிடும் காலம் மாறி, வீட்டிற்கே சாப்பாட்டை வரவைத்து உண்ணும் நிலை இன்று நடைமுறையில் உள்ளது. சாப்பாட்டை ஆர்டர் செய்தால் டெலிவரி செய்வது ஒரு நபராகவே இதுநாள் வரை இருந்தது. ஆனால் தற்போது அந்த வேலையை ஆளில்லா ட்ரோன் விமானங்கள் செய்ய உள்ளன.

போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும், நேரம் அதிகரிப்பு, டெலிவரி பாய்கள் சம்பளம் ஆகியவற்றை குறைக்க பிரபல உணவு விநியோக நிறுவனமான உபர் ட்ரோன் விமானத்தில் டெலிவரி செய்யும் முறையை அறிமுகம் செய்துள்ளனர். அமெரிக்காவின் சான்டியாகோ நகரில் பரிசோதனை ரீதியில் குட்டி விமானங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு உணவு வினியோகிக்கப்பட்டதாக உபர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறை வெற்றி பெற்றதால் பிற நகரங்களுக்கும் இச்சேவை விரிவுபடுத்தப்பட உள்ளதாகவும் உபர் நிறுவனம் தெரிவித்துள்ளது. அமேசான், கூகுள் போன்ற நிறுவனங்களும் குட்டி விமானங்களைப் பயன்படுத்தி பொருள் விநியோக சேவையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


# பறவைகளிடம் இருக்கும் திசை அறியும் காந்த சக்தி



பறவைகள் பூமியின் காந்த சக்தியை உணர்ந்து தங்களுக்கு திசை காட்டும் தன்மையைப் பெற்றுள்ளன. இதன் பயனாகத்தான் பல ஆயிரம் மைல்கள் கடந்தும் தங்கள் பயணத்தை பறவைகளால் மேற்கொள்ள முடிகிறது.

பறவைகளின் மூக்கிலுள்ள அதிக இரும்புத் தன்மைதான் பூமியின் காந்த சக்திக்கு உபயோகமாகிறது என்று முதலில் ஆராய்ச்சியாளர்கள் நினைத்தனர். ஆனால் புதிதாக வரும் பல ஆராய்ச்சிகளின்படி ஒரு வித புரோட்டீன் பறவைகளின் கண்களில் உள்ளதாகவும், அதுவே பூமியின் காந்த நிலைப்பாட்டைக் காண உபயோகமாக இருப்பதாக கண்டுள்ளனர்.

வட துருவத்தில் வாழும் விதைகளைக் கொறித்து தின்னும் அலகு கொண்ட வரிக்குதிரை பின்ச் (Zebra Finch) மற்றும் ஐரோப்பிய ராபின் (European Robin) பறவைகளில் 39 வகையான பறவைகளை சோதனைக்கு எடுத்துக் கொண்டு ஆராய்ந்தனர். அப்போது Cry 4 (Cryptochrome 4) என்னும் ஒரு வகை புரோட்டீன் அவ்வகைப் பறவைகளின் கண்களின் விழித்திரையில் இருப்பதாகவும், Cry 1 மற்றும் Cry 2 வகை புரோட்டீன்களின் அளவு ஒரு நாளில் அதிகரித்து குறைந்தபோதும் Cry 4-ன் அளவு அப்படியே இருந்ததாகவும், மேலும் அது நிலைத்து உருவாவதையும் கண்டனர். இதுவே முதன் முறையாக விலங்கினங்களில் அவ்வகை புரோட்டீன் இருப்பதைக் காட்டியது. அதுமட்டுமல்லாமல் ஒரு முக்கிய வகை மூலக்கூறு காந்த மண்டலத்தைக் கண்டுபிடிப்பது என்பதும் முதன் முதலாக அறியப்பட்ட செய்தியாகும்.



குறிப்பாக Cry 4 உயிரியல் தூக்க சுழற்சியைப் பொறுப்பாக கவனிக்கிறது. மேலும் அது காந்த மண்டலத்துடன் வினைபுரிவதையும் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு காரணம் குவாண்டம் இயக்கவியல் தான். இவ்வகைப் புரோட்டீன், குவாண்டம் தொடர்பினால் பறவைகளுக்கு காந்த மண்டலத்தை உணரும் சக்தியைக் கொடுப்பதாக விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.

இதற்கு முன்பு நடந்த ஆராய்ச்சிகளில் பறவைகள், குவாண்டம் கோட்பாட்டை பயன்படுத்துகின்றன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுவும் பறவைகள் விண்ணில் பறக்கும்போது காந்த வெளிமண்டலத்தைப் "பார்ப்பதாக" கருதினர். விண்ணில் பறக்கும் போது, ஏவியன் கிரியேச்சர்ஸ் (Avian creatures) என்றழைக்கப்படும் பறவை இனங்களின் கண்களில் பல வித மாற்றங்கள் நடக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். மேலும், பூமியின் காந்தமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களை அந்த பறவைகள் உணருவது தெரியவந்தது. இவ்வகை மாற்றங்களை படமாக எடுத்து ஆய்வு செய்தனர். அப்போது, பறவையின் கண்களில் பலவித நிழல்கள் தெரிவது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த உருவம் ஒரு தெளிவான வரைவுக் கோடாக இல்லாமல் இருண்ட மற்றும் ஒளியுடன் கூடிய நிழலாய்த் தெரிவதாகக் கண்டுள்ளனர். காந்த மண்டலத்தின் மாற்றத்திற்கேற்ப இது நடப்பதாகக் கருதுகின்றனர்.

மனிதர்களின் கண்களில் ஒளிச்சேர்க்கை கூம்பு மூன்று வகையாக உள்ளது. ஒவ்வொரு கூம்பின் இயல்பும் சிவப்பு, பச்சை மற்றும் இளம் நீலத்திற்கு உணர்திறன் கொண்டவை. இதையே நாம் 'ட்ரை க்ரோமாட்டிக் கலர் விஷன்' (Tri chromatic Color Vision) என்கிறோம். பறவைகளுக்கு இன்னும் ஒரு கூம்பு அதிகமாக இருக்கிறது. இது டெட்ரா க்ராமேடிக் கலர் விஷன் (Tetrachromatic Color Vision) எனப்படுகிறது. இது ஒளி நிறமாலையை மேலும் விரிவடையச் செய்து புறஊதா வண்ண அலைகளைப் பார்க்க வகை செய்கிறது.

# விரல் ரேகை, தனித்த அடையாளம் கொண்ட அதிசயம்...

விரல் ரேகை விஞ்ஞானம் உலகம் தோன்றிய காலம் முதல் பயணிக்க தொடங்கி விட்டது. கி.பி. 851-ம் ஆண்டு மற்றும் 7-ம் நூற்றாண்டிலும் கி.பி.900 முதல் 1300 வரை எல்லா சாசனங்களிலும் கைவிரல் ரேகைகள் இடம்பெற்று இருந்தது. விரல் ரேகை முத்திரை தனித்த அடையாளம் கொண்ட அதிசயம். ஆண்டவனின் அற்புதம். பிறப்பிலிருந்து இறப்பு வரை விரல் ரேகை மாறாது. ஒருவருடைய விரல் ரேகை அந்த நபரின் மற்ற விரல்களுக்கோ அல்லது உலகத்திலுள்ள யாருக்கும் பொருந்தாது. மேலும் மேல் கோடுகள் (ரிட்ஜஸ்), பள்ளமான உள்கோடுகள் (பெர்ரோஸ்) மேலும் கண்ணுக்கு எளிதில் புலப்படக் கூடிய (கிரீஸஸ்) ஆகியவற்றை விஞ்ஞானிகள் விவரித்து விஞ்ஞானத்தை ஊர்ஜிதம் செய்தனர்.

1787 முதல் 1869-ம் ஆண்டுவரை வாழ்ந்த டாக்டர் ஜான் இவான்ஜிலிஸ்ட் புர்கன்ஜி என்னும் விஞ்ஞானி, அறிவியல் மேதை விரல் ரேகை தனித்துவத்தையும், மாறாத்தன்மை மற்றும் 9 வகைபாடுகளை தன்னுடைய ஆராய்ச்சி கட்டுரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து 1822 முதல் 1916-ம் ஆண்டு வரை வாழ்ந்த டார்வின் தொப்புள்கொடி உறவினர், விரல் ரேகை விஞ்ஞானத்தின் தந்தை என்று போற்றப்படும் சர் பிரான்சிஸ் கால்டன் விரல்ரேகை தத்துவத்தை ஊர்ஜிதம் செய்தார். ஆர்ச், லூப், வேர்ல் என்பவர் விரல் ரேகையின் 3 வடிவத்தை கண்டுபிடித்ததால் ஸ்காட்லாண்டு யார்டில் பயன்பாட்டிற்கு வந்தது. பிறகு 1833 முதல் 1917 வரை வாழ்ந்த கொல்கத்தாவின் மாவட்ட கலெக்டர், விரல் ரேகை விஞ்ஞானத்தை பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார். பத்திரப்பதிவு உள்பட அனைத்திலும் விரல் ரேகையை பயன்படுத்த கட்டாயமாக்கினார். டாக்டர் ஹென்றி பால்ஸ், ஜப்பானில் விரல்ரேகை தத்துவத்தின் அடிப்படையில் குற்றங்களை கண்டுபிடிக்க ஆரம்பித்து விட்டார்.

1850 முதல் 1931 வரை வாழ்ந்த சர் எட்வர்டு ரிச்சர்ட் ஹென்றி என்னும் வங்காள மாநில ஐ.ஜி. விரல் ரேகை விஞ்ஞானத்தை வங்காள மாநில அரசு உதவியுடன் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். 22.8.1895-ம் ஆண்டு மதராஸ் பட்டினத்தில் குற்றப்புலனாய்வு துறையில் வட்டாரக் காவல்துறை அதிகாரி பொறுப்பில் பணியாற்றிய ஆய்வாளர் இ.ஏ. சுப்பிரமணிய அய்யர் பெரும் முயற்சியால் விரல் ரேகை பதிவுகளை பதிவு செய்து வகைபாடு செய்து, குற்ற வழக்குகளை கண்டுபிடிக்க ஆரம்பித்துவிட்டார். ஆனாலும் 12.6.1897-ம் ஆண்டு இந்திய அரசாங்க இசைவு பெற்று முறைப்படி விரல் ரேகை கூடம் முதன் முதலில் இந்தியாவில் கொல்கத்தாவில் உதயமாகியது.

விதைக்கப்பட்ட விரல் ரேகை விஞ்ஞானத்தை உதாசீனப்படுத்தாமல், இந்தியாவின் சட்டத்தை இயற்றி, மருத்துவமனை, தொழிற்சாலை, பயணம் செய்யும்போது, காவல்துறை, நீதித்துறை, ஓட்டுநர் உரிமம், ஏ.டி.எம்., பாஸ்போர்ட், குடும்ப அட்டை, வங்கிகள், பத்திரப்பதிவு அலுவலகம், ஆதார் அட்டை போன்ற அனைத்து அரசாங்க மற்றும் தனியார் துறையில் பயன்பாட்டிற்கு வந்தால் இந்திய உலகத்தின் உயர்ந்த நாடுகளின் வரிசையில் முதல் இடத்தில் நிற்கும்.

மனிதனின் கையெழுத்துக்கள் மாறுபடும். புகைப்படங்கள் போன்றவை ஊர்ஜிதமானவை அல்ல. மாறும் தன்மை கொண்டது. ஆனால் விரல்ரேகை விஞ்ஞானத்தின் மீது உறுதி காட்டினால் விவாதம் விரிவாகாது. தர்க்கத்தை விரும்பவில்லை என்றால் நீதிமன்றத்தின் கைவிரல் ரேகை விஞ்ஞானத்தை பயன்படுத்தி உண்மையான தீர்வு காணலாம்.